**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**அனுப்புநர்**

**முனைவர். ப. ராஜ்குமார், MA.,LLB.,Phd.,**
**மாண்புமிகு மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பெறுநர்**

மரியாதைக்குரிய துணை மேயர்
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக
வளர்ச்சி, சட்டம், நீதி மன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்,
(தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி)

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோயம்புத்தூர், மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, கவுண்டம்பாளையம்,
கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிகள்)

**ந.க.எண் : 9981/2015 / எம்சி. 8 நாள் : 16 .10.2015**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் **19.10.2015 திங்கள் கிழமை காலை 10.15** மணிக்கு மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்துத்துறை தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) ப. ராஜ்குமார்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - அக்டோபர் 2015

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| **1** | பொது சுகாதாரப் பிரிவு - கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகம் மற்றும் கோவைப்புதூர் பகுதிகளில் 2 அம்மா உணவகங்கள் திறப்பது – மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **2** | பொது சுகாதாரப்பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு 2015-16 ம் ஆண்டிற்கான சீருடைகள் வழங்குதல் - செலவினம் ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **3** | பணியமைப்பு - திருமதி. எம். மணிமேகலை, இளநிலை உதவியாளர், வடக்கு மண்டலம் - மதுரை மாநகராட்சிக்கு பணி மாறுதல் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **4** | பொறியியல் பிரிவு - எட்டு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பும் ஒப்பந்தப்புள்ளி ஏற்பதற்கு மாமன்றத்தின் அனுமதியும் கோருதல் - |
| **5** | பொறியியல் பிரிவு - மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள மிடுக்கான நகரம் (Smart City) திட்டத்தில் பங்கேற்றல் - குடிநீர் மேலாண்மை, திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை, நகர்ப்புற போக்குவரத்து மேலாண்மை, மின்ஆளுமை மற்றும் பொதுமக்கள் சேவை முதலான திட்டங்களை செயல்படுத்துதல் - திட்ட அறிக்கை தயாரித்து அனுப்புதல் - தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு நிறுவனத்திற்கு அனுமதி வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **6** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 13 – தடாகம் சாலையில் மேற்கு பகுதியில் (அவிலா கான்வென்ட் முதல் பாரதி மெட்ரிகுரேசன் பள்ளி எதிர்புறம் வரை) மூடுபலகையுடன் ஆர்.சி.சி. வடிகால் அமைத்தல் - மதிப்பீடு ரூ. 67.50 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **7** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 14 – தடாகம் சாலையில் மேற்கு பகுதியில் (கோவில்மேடு நுழைவு வாயில் முதல் அம்பேத்கர் சாலை சந்திப்பு வரை) மூடுபலகையுடன் ஆர்.சி.சி. வடிகால் அமைத்தல் - மதிப்பீடு ரூ. 67.00 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **8** | வடக்கு மண்டலம் - வார்டு எண் 1- துடியலூர் எரிவாயு (L.P.G.) மயானம் தி./ள். ஈஷா ∴பவுண்டேஷன், கோயம்புத்தூர் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு பெறப்படும் தொகையினை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது - ஏற்கனவே எரிவாயு உருளைகளுக்கு என தி.ள். சிந்தாமணி கோ-ஆப்ரேடிவ் சூப்பர் மார்க்கெட், கோயம்புத்தூர் அவர்களுக்கு மாநகராட்சியால் செலுத்தப்பட்ட தொகைக்கு பின்னேற்பும், தகனத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டு முன்னனுமதி வழங்கியதற்கு பின்னேற்பும் மற்றும் தற்சமயம் தி./ள். சிந்தாமணி கோஆப்ரேடிவ் சூப்பர் மார்க்கெட், கோயம்புத்தூர் அவர்களுக்கு நிலுவையில் உள்ள தொகையை செலுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **9** | பொறியியல் பிரிவு - வார்டு எண் 37 – அவினாசி சாலையில் பி.எஸ்.ஜி. கலைக்கல்லூரி மற்றும் அரவிந்த் கண் மருத்துவமனை அருகே நடைபாதை மேம்பாலம் அமைத்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **10** | பொறியியல் பிரிவு - பொறியியல் பிரிவு வளர்ச்சி பணிகள் நடைபெறுவதற்கு ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர்கள் அமர்த்துதல் பணி மற்றும் மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட பூங்காக்களை ஒருவருட காலத்திற்கு பராமரித்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **11** | நகரமைப்புப் பிரிவு - நில உரிமை மாற்றம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கல்லாமேடு குடிசைப்பகுதியில் வசித்து வரும் 76 ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மாநகராட்சிக்கு சொந்தமான T.S.No.3, பிளாக்.10, வார்டு.43 பகுதியில் உள்ள 0.73 ஏக்கர் (அ) 0.2965 ஹெக்டேர் இடத்தில் குடியிருப்பு வீடுகள் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் கட்டுதல் – இடத்தினை குடிசை மாற்று வாரியத்திற்கு வழங்க அரசுக்கு பிரேரணை அனுப்புதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **12** | நகரமைப்புப் பிரிவு - வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்பு திட்டம் – பேரூர் வட்டம் – குனியமுத்தூர் கிராமம் – க.ச.18/5 (நத்தம் க.ச.877) நத்தம் புறம்போக்கு – 12261 ச.மீ. பரப்பு – 10 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வரும் 227 ஆக்கிரமிப்புதாரர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் நடவடிக்கைகள் – மாநகராட்சியின் இசைவினை தெரிவித்தல் – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **13** | நகரமைப்புப் பிரிவு - வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்பு திட்டம் – பேரூர் வட்டம் – குனியமுத்தூர் கிராமம் – க.ச.18/4 (நத்தம் க.ச.687/3 உள்ளிட்ட புலங்கள்) காலியிடம், நத்தம் காலியிடம், காலிமனை எனக் குறிப்பிட்டவை – 8998.5 ச.மீ. பரப்பு – 10 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வரும் 181 ஆக்கிரமிப்புதாரர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் நடவடிக்கைகள் – மாநகராட்சியின் இசைவினை தெரிவித்தல் – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **14** | நகரமைப்புப் பிரிவு - சாலைகள் – கோயம்புத்தூர் மாநகராட்சி - காந்திபுரம் பகுதியில் நெடுஞ்சாலைத்துறை மூலம் மேம்பாலம் கட்டுதல் – பணி மேற்கொள்வதற்காக மாநகராட்சி சாலைகளை 300மீ நீளத்திற்கு நெடுஞ்சாலைத் துறைக்கு மாமன்ற தீர்மானத்தின்படி நிரந்தரமாக ஒப்படைக்க அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டது – கூடுதலான நீளங்களில் சாலைகளை நிரந்தரமாக ஒப்படைக்க கோரியது– மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **15** | நகரமைப்புப் பிரிவு - நில பயன்பாடு மாற்றம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.08.2014 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள் – 500 தொழிலாளர்களுக்கு தங்கும் அறைகள் (Dormitories) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தால் பொதுப்பணித்துறை மூலம் கட்டுதல் – குடியிருப்புகளுக்கு அருகில் உள்ள பொது ஒதுக்கீடு பகுதி (Reserve site)ல் இட ஒதுக்கீடு செய்யக்கோரியது – பொது ஒதுக்கீடு இடத்தினை ஒதுக்கீடு செய்வது தொடர்பாக நில பயன்பாடு மாற்றம் குறித்து நகர் ஊரமைப்பு துறைக்கு பிரேரணை அனுப்பவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலம் அரசு அனுமதி பெற்று, தொழிலாளர் நல துறைக்கு, நடப்பு சந்தை மதிப்பில் நிலம் ஒதுக்கீடு செய்யவும் பிரேரணை அனுப்புதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **16** | நகரமைப்புப் பிரிவு - தமிழ்நாடு சட்டமன்ற மனுக்கள் குழு (2012 – 2013) - கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு.கோவை கண்ணையன் (எ) வே.பழனிச்சாமி அவர்களின் மனு எண்.6400 - வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.26ல் உள்ள வெள்ளக்கிணறு கிராமம்- தாய்சேய் நல விடுதிக்கு பின்புறம் அரசுக்கு சொந்தமான காலியாக உள்ள இடத்தில் சமுதாய நலக்கூடம் கட்டித் தரக்கோரியது – மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெற மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **17** | நகரமைப்புப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – கோவை வடக்கு வட்டம், அனுப்பர்பாளையம் கிராமம் டி.எஸ்.எண்.1091/4 பாகம், காலையில் 152 சதுரடி இடத்தினை திருமதி.ராஜேஸ்வரி அவர்களின் வாரிசுதாரர்களுக்கு நிலக்கிரயத்திலிருந்து திரும்ப ஒப்படைக்கக் கோரியது – அரசுக்கு பிரேரணை அனுப்புதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **18** | நகரமைப்புப் பிரிவு - நிலமாற்றம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் (வடக்கு) வட்டம் பகுதியில் உள்ள கிராமங்களில் வருவாய் துறைக்கு சொந்தமான இடங்களில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக குடியிருப்புகள் கட்டுவதற்கு முன்நுழைவு அனுமதி வழங்க மாநகராட்சியின் ஆட்சேபனையின்மை தெரிவிக்கப்பட்டது – திருத்திய மாநகராட்சியின் தீர்மானம் கோரியது – மாநகராட்சியின் ஆட்சேபனையின்மை தெரிவித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 19 | நகரமைப்புப் பிரிவு - மேற்கு மண்டலம், வார்டு எண்.24, மேதவர் காலனி பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் (டி.எஸ்.எண்கள்.938/1, 938/2, 939/1, 939/2, 940/1, 940/2, 943/2, 946/1, 946/2, 946/3, 947/1, 947/2, 947/3, 948/1, 948/2 மற்றும் 948/3) 2279.50 ச.மீ பரப்பளவில் கட்டப்பட்டுள்ள பழைய குடியிருப்பில் வாடகை அடிப்படையில் நீண்ட பல வருடங்களாக உள்ள குடியிருப்பு கட்டிடம் மிக பழையதாக இருப்பதை குடிசை மாற்று வாரியத்தின் கீழ் அக்குடும்பங்கள் அவ்விடத்திலேயே வாழத்தக்க வகையில் அடுக்குமாடிக் கட்டிடமாக கட்ட அரசு ஒப்புதல் பெற்று கட்டுமானம் செய்வது – மாநகராட்சி நிலம் குடிசை மாற்று வாரியத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்தல்– மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 20 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி –பிரதான அலுவலகம் - பொறியியல் பிரிவு - திரு. எல் அருணாச்சலம், ஓட்டுநர் - வீடு கட்டும் முன்பணம் அனுமதித்தல்– மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 21 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் -2015 ஆண்டிற்கு அரசு பொருட்காட்சி – வ.உ.சி.பூங்கா மைதானத்தில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் தற்காலிக குத்தகை உரிமம் - ஏலக்கோரிக்கை ஏற்று மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்படை செய்யப்பட்டது – மாமன்றத்தின் பின்னேற்பு கோருதல் - தொடர்பாக. |
| 22 | கல்விபிரிவு - மாநகராட்சி பள்ளிகளில் 10 மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு தினசரி மாலையில் சிறப்பு வகுப்புகள் நடைபெறுவது – சிறப்பு வகுப்புகளில் சிற்றுண்டி வழங்குதல் - ஒப்புந்தப்புள்ளி கோருதல் - செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 23 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி –திரு. மு. நாகராஜ், இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர், மத்திய மண்டலம்- வீடு கட்டும் முன்பணம் அனுமதித்தல்– மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 24 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.54 – விவேகானந்தா சாலையிலுள்ள ரங்கநாதபுரம் ஆரம்பப்பள்ளி வளாகத்தில் தற்காலிகமாக தரைதளம் மற்றும் முதல் தளம் (13058.55 சதுரடி) மற்றும் வடபுறத்தில் 1720 சதுரடியினை கூடுதலாக அலுவலக பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்து வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது - வாடகை மறு நிர்ணயம் செய்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக. |
| 25 | பொறியியல் பிரிவு - 8 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 26 | பொறியியல் பிரிவு - 3 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பும் ஒப்பந்தப்புள்ளி ஏற்பதற்கு மாமன்றத்தின் அனுமதியும் கோருதல் - தொடர்பாக |
| 27 | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் முன்னாள் மாநகராட்சியின் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துதல் - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது – திட்ட அறிக்கை அறிக்கையின் உண்மை தன்மையை ஆய்வு செய்யும் பொருட்டு தகுதிவாய்ந்த தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனத்தை நியமித்தல் - திட்ட மேம்பாட்டு மானிய நிதியில் மேற்கொள்ளுதல் - தமிழ்நாடு நகர்புர உட்கட்டமைப்பு நிதி சேவைக்கழகத்திற்கு ஒப்படை செய்தல் - மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்றத்தின் பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| 28 | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண் -25 கிருஷ்ணசாமி சாலையில் தேவாங்க பள்ளி சாலை முதல் மேம்பாலம் வரை தார்சாலையை புதுப்பித்தல் பணி–மதிப்பீடு ரூ.65,50,000/- மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 29 | பொறியியல் பிரிவு - 11 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 30 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு ஆண்டு சந்தா ரூ. 5,000/-(ஐந்தாயிரம்) என நிர்ணயித்து – வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 31 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி –திருமதி. ஆ. ஜானகி, இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர், மத்திய மண்டலம்- வீடு கட்டும் முன்பணம் அனுமதித்தல்– மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **32** | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண் 51 – டாக்டர் இராதாகிருஷ்ணா சாலை தென்புறத்தில் ஆறுமுக்கு முதல் கிழக்காக உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் பணி-மதிப்பீடு ரூ.73.90 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **33** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 22, பாரதி பூங்காவில் தளவாடங்களுடன் கூடிய உடற்பயிற்சி கூடம், தியான அறை கட்டுதல் மற்றும் கூடுதல் அபிவிருத்தி பணிகள் செய்தல் – மதிப்பீடு ரூ.73.90 இலட்சம் - 60.00 இலட்சம் - மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல் |
| **34** | பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டம் - வெள்ளலூர் பகுதியில் தற்சமயம் நிறுவப்பட்டுள்ள இயற்கை உரம் தயாரிக்கும் ஆலை வளாகம் மற்றும் சேனிடரி லேண்ட்ஃபில் அமைப்புகளில் திறந்தவெளியில் குவிக்கப்பட்டுள்ள திடக்கழிவுகளை சுற்றுச்சூழல் மாசுபடாத வண்ணம் பாதுகாப்பான முறையில் பையோ மைனிங (BIO-MINING PROCESS) முறையில் கழிவு செய்யும் பணியினை மேற்கொள்வதற்கு விருப்பக்கேட்பு அறிக்கை (EXPRESSION OF INTEREST) கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **35** | பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டம் - இம்மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும் குப்பை மாற்று நிலையங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள், இரண்டாம் கட்ட குப்பை அகற்றும் பணிகள், இயற்கை உரம் தயாரிக்கும் ஆலை மற்றும் சேனிடரி லேண்ட்ஃபில் கட்டமைப்பு ஆகியவற்றின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளின் செயல்பாடுகள் மற்றும் செயல் திறனங்களை உறுதி செய்ய ஒரு திட்ட மேலாண்மை ஆலோசகரை (Project Management Consultants) நியமனம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **36** | நகரமைப்புப் பிரிவு - மாநகராட்சி பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 25 பேருந்து நிழற்குடைகளுடன் கூடுதலாக 50 நிழற்குடைகள் தனியார் மூலம் உருவாக்கம் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - விளம்பர உரிமத்துடன் 15 ஆண்டுகளுக்கு பராமரிப்பு மற்றும் தூய்மை பணிகள் மேற்கொள்ளவும் 15 ஆண்டு முடிவிற்கு பின்னர் மேலும் 5 ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு வழங்கவும் மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். |
| **37** | நகரமைப்புப் பிரிவு - கோயம்புத்தூர் மாநகர காவல் எல்லைக்குள் அமைந்துள்ள போக்குவரத்து தானியங்கி சிக்னல்களில் CCTV கேமராக்கள் பொருத்தி மூன்று வருட காலத்திற்கு விளம்பர உரிமத்துடன் இயக்கி பராமரிக்கவும், மூன்று வருடங்கள் முடிந்தபின்னர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு வழங்கவும் பணியின் அவசர அவசியம் கருதி பணிக்கு Phase I ல் நான்கு சிப்பங்களுக்கும், Phase II ஒரு சிப்பத்திற்கும் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கிய முன் அனுமதிக்கு பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| **38** | பொறியியல் பிரிவு - 6 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது - மாமன்றத்தின் பின்னேற்பு கோருதல் -தொடர்பாக |
| **39** | பொறியியல் பிரிவு - லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **40** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 99 – வெள்ளலூர் பிரதான சாலையில் ஜிடி டேங்க் முதல் முல்லை நகர் வரை மழைநீர் வடிகால் கட்டுதல் பணி – மதிப்பீடு ரூ. 52.00 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **41** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 99 – செட்டிபாளையம் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணி – மதிப்பீடு ரூ. 52.00 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **42** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 99 – -ஸ்ரீராம் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணி – மதிப்பீடு ரூ. 74.50 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **43** | பொறியியல் பிரிவு - 9 இடங்களில் பொதுக்கழிப்பிடம் கட்டுதல் பணி - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டது - மாமன்றத்தின் பின்னேற்பு கோருதல் -தொடர்பாக |

| | |
|---|---|
| **44** | பொறியியல் பிரிவு - 4 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாண்புமிகு மேயா் அவா்களின் முன்அனுமதி பெறப்பட்டது - மாமன்றத்தின் பின்னேற்பு கோருதல் -தொடா்பாக |
| **45** | பொறியியல் பிரிவு - 7 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடா்பாக |
| **46** | பொறியியல் பிரிவு - வாா்டு எண் 91 – பழனியப்பா நகா் - ஸ்ரீ பால் நகா் மற்றும் அக்சயா காா்டன் பகுதியில் தாா்தளம் அமைத்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **47** | பொறியியல் பிரிவு - 12 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடா்பாக |
| **48** | பொறியியல் பிரிவு - வாா்டு எண் 79 – தடாகம் பிரதான சாலையில் மையத்திட்டு விளக்குகள் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடா்பாக |
| **49** | பொது கணக்குப் பிரிவு - தமிழ்நாடு நகா்ப்புற வளா்ச்சித் திட்டம் III-ன்கீழ் கடனுதவி பெறப்பட்டது – குடிநீாமற்றும் சுகாதார கூட்டு நிதியத்திடமிருந்து மறுகடன் ரூ. 34.40 கோடி பெறுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **50** | பணியமைப்பு – கோயம்புத்தூா் மாநகராட்சி **–** பொறியியல் பிரிவு**–** சில்லரை செலவின அடிப்படையில் பணியாற்றியது – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட பின்பு இம்மாநகராட்சிக்கு தோற்றுவிக்கப்படும் பணியிடஙகளில் ஈா்த்துக் கொள்ளுவது – அரசுக்கு பரிந்துரை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **51** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வாா்டு எண் 18 – மகாராணி அவென்யு பேஸ் 3 பகுதியில் மாநகராட்சி இடத்தில் சுற்றுச்சுசுா் மற்றும் பூங்கா அமைத்தல் - மதிப்பீடு ரூ. 52.00 இலட்சம் - மாமன்ற நிா்வாக அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **52** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பூங்காக்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **53** | பொறியியல் பிரிவு **–** மாநகராட்சி பகுதிகளில் **–** **143.945** கி.மீ.நீளத்திற்கு சாலைப்பணிகள் மேற்கொள்ள TUFIDCO நிறுவனத்திடம் ரூ.**99.8994** கோடி கடன் உதவி கோரி கருத்துரு மற்றும் விரிவான திட்ட அறிக்கை அனுப்பியது **–** மாமன்றத்தின் பின்னேற்பு கோருதல் **–** தொடா்பாக. |
| **54** | பொறியியல் பிரிவு - 3 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடா்பாக |
| **55** | பொறியியல் பிரிவு - வாா்டு எண்.**5–**ல் மேட்டுப்பாளையம் சாலையின் மையப்பகுதியில் கவுண்டம்பாளையம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புலிருந்து அரசு தொழிற் பயிற்சி நிலையம் வரை **10** மீட்டர் உயரமுள்ள சென்டர் மீடியன் தெரு விளக்கு கம்பம் அமைத்து LED விளக்குகள் பொருத்துதல் பணி **–** ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடா்பாக |
| **56** | பொறியியல் பிரிவு - 2015-16 ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலைவிபர அட்டவனை நடைமுறைப்படுத்துதல் - மாமன்றம் பதிவு செய்தல் - தொடா்பாக |
| **57** | பொறியியல் பிரிவு - மரபுசாரா எரிசக்தி திட்டம் - வெள்ளியங்காடு, நீா்உந்து நிலையம் - ஒண்டிப்புதூா் மற்றும் உக்கடம் கழிவுநீா் சுத்திகரிப்பு நிலையங்கள் - வெள்ளலூா் குப்பைக் கிடங்கு ஆகிய பகுதிகளில் சூரிய சக்தி மின்கலன் அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடா்பாக |
| **58** | பொறியியல் பிரிவு - 18 நகா்நல மையங்களை தரம் மேம்படுத்துதல் பணி - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடா்பாக |
| **59** | பொறியியல் பிரிவு - வாா்டு எண் 30- கண் மருத்துவமனை சாலை பூபதி நகா் மற்றும் சரவணம்பட்டி இளங்கோ நகல் பகுதிகளில் தாா்தளம் புதுப்பித்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாண்புமிகு மேயா் அவா்களின் முன்அனுமதி பெறப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடா்பாக |
| **60** | பொறியியல் பிரிவு - 3 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடா்பாக |
| **61** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பூங்காக்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |
| **62** | பொறியியல் பிரிவு - மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளில் குடிநீா் இணைப்பு வழங்குதல் - வைப்புத்தொகைகளை திருத்தியமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக |

**நன்றியுரை**

**அ) <u>திருக்குறள்</u>**

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

**குறள் - 444**

**<u>விளக்கம்</u>**

தம்மைவிட ஆற்றிலில் சிறந்த பெரியோரின் கற்றமாக, அவர்வழி ஒழுகுதல் மிகப்பெரிய திறனும் வல்லமையும் ஆகும்.

**திருவள்ளுவர்**

---

**ஆ) <u>தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - புதியதாக கோயம்புத்தூர் மாநகரத்தில் 2 " அம்மா உணவகங்கள் " திறப்பது - மாமன்றத்தில் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

**********

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 10 "அம்மா உணவகங்கள்" துவங்க தீர்மான எண் 8 நாள் 25.04.2013 அன்று அனுமதி வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் ஒவ்வொரு மாநகராட்சியிலும் குறைந்த விலையில் கூடுதலாக 2 அம்மா உணவகங்கள் திறக்கப்படும் என அறிவித்துள்ளார்கள்.

மேலும், புதிதாக கோயம்புத்தூர் மாநகராட்சியில் 24.05.2015 அன்று கீழ்க்கண்ட 2 இடங்களில் "அம்மா உணவகங்கள் " திறக்க ஏற்பாடுகள் நடைபெற்றது.

1 கோயம்புத்தூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகம் (கோயம்புத்தூர் மத்தியம் மண்டலம்)
2 கோவைப்புதூர் (கோயம்புத்தூர் தெற்கு மண்டலம் )

மேலும், புதிதாக துவங்கப்பட்டுள்ள ஒரு அம்மா உணவகத்திற்கு நாளொன்றுக்கு ரூ.7,419/- வீதம் ஒரு மாதத்திற்கு ரூ.2,22,570/-ம் ஒரு வருடத்திற்கு ரூ.27,07,935/– ஆகமொத்தம் புதிய 2 அம்மா உணவகத்திற்கு ஒரு வருடத்திற்கு ரூ.54,15,870/- கூடுதல் செலவினம் ஏற்படும்.

எனவே கோயம்புதூர் மாநகராட்சி பகுதிகளில் புதியதாக திறக்கப்பட்டுள்ள 2 அம்மா உணவகங்களுக்கு அரசாணையின்படி உணவகங்களை நடத்தவும், இதற்கான செலவினத்திற்கு கோயம்புத்தூர் மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், மாமன்றத்தில் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். ந. க. எண் 3365/2015/எம்இ 6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 199 நாள் 19.10.2015</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி பொது சுகாதாரம் - துப்புரவு பணியாளர்களுக்கு 2015-16ம் ஆண்டிற்கான சீருடைகள் வாங்கி வழங்குதல் - தொடர்பாக.

--------

அரசாணை எண் (2டி) எண் 37 நாள் 14.05.1999 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை உத்தரவுப்படி கோயம்புத்தூர் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவுபணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும், ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு இரண்டு ஜோடி சீருடைகளும், ஒரு ஜோடி காலணியும், ஒரு தலைப்பாகையும், பெண் துப்புரவு பணியாளர்களுக்கு இரண்டு பாலிஸ்டர் புடவையும், இரண்டு ஜாக்கெட்டுகளும், 1 ஜோடி காலணியும் மற்றும் ஒரு தலைப்பாகை துணியும் மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. ஒரு ஜோடி சீருடை தீபாவளிப் பண்டிகைக்கும் மற்றொரு ஜோடி சீருடை பொங்கல் பண்டிகையின் போதும் வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணை (வாலாயம்) எண் 393 நாள் 16.09.1997 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மா.ந.2) உத்தரவுப்படி, மலேரியா ஒழிப்புத்திட்ட பணியாளர்களுக்கு 2 ஜோடி முழுக்கால் சட்டை, 2 ஜோடி அரைக்கை சட்டை, காலணி ஆகியன வழங்கப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 87, நாள் 30.09.2009-ன்படி அனைத்து துப்புரவு பணியாளர்களுக்கும் முழுக்கால் சட்டை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண் 50 கைத்தறி, காதி (டி4) டிபார்ட்மெண்ட் நாள் 10.03.1995ன்படி அரசுத்துறை நிறுவனங்களான கோ-ஆப்டெக்ஸ், தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ், தேசிய பஞ்சாலைக்கழகம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து இவ்வகை சீருடைகள் நேரிடையாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அரசாணையின்படி ஆண்துப்புரவு பணியாளர்களுக்கு 1 செட் சீருடைக்கு தையற்கூலி ரூ.100/-, பெண் துப்புரவு பணியாளர்களுக்கு 1 ஜாக்கெட் தையற்கூலி ரூ. 20-ம் மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வந்தது. மாமன்ற தீர்மான எண் 87, நாள் 30.09.2009-ன்படி ஆண் பணியாளர்களுக்கு 1 செட் சீருடைக்கு தையற்கூலி ரூ. 200-ம் மற்றும் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு 1 ஜாக்கெட் தையற்கூலி ரூ. 40-ம் வழங்க தீர்மானிக்கப்பட்டு இதுவரை வழங்கப்பட்டுள்ளது. தற்போது சுகாதார நிலைக்குழு தீர்மான எண் 33 நாள் 10.10.2013-ன்படி ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு தையற்கூலி ரூ.450/- மற்றும் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு ரூ.100/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

சென்ற 2014-15-ம் ஆண்டு தையற்கூலி செலவினம் ரூ.18,65,100/-யும், சீருடைகள் வாங்கி வழங்க ரூ. 32,77,680/-யும் மற்றும் காலணிகளுக்கு ரூ. 5,12,590/-யும் ஆகமொத்தம் ரூ. 56,55,370/- செலவாகியுள்ளது.

இவ்வாண்டு சீருடைகள் வாங்குவதற்கு ரூ. 60.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே அனைத்து மண்டல துப்புரவு அலுவலா்களிடமிருந்து பெறப்பட்ட பட்டியலின்படி மாநகராட்சியில் தற்போது பணிபுரியும் துப்புரவு பணியாளா்கள் மொத்தம் 2749 நபா்களுக்கு 2015-16-ம் ஆண்டிற்கு 2 ஜோடி சீருடைகள், (தையற்கூலி) மற்றும் காலணிகள் ஆகியன அரசுத்துறை நிறுவனங்களிடமிருந்து ரூ. 60.00 இலட்சத்திற்கு வாங்கி வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 4443/2015/எம்.இ.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 200 நாள் 19.10.2015</u>**

அனுமதிக்கப்பட்டது.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 3

**பொருள்** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி.எம். மணிமேகலை, இளநிலை உதவியாளர், வடக்கு மண்டலம் – மதுரை மாநகராட்சிக்கு பணிமாறுதல் கோருதல் – தொடர்பாக.

**பார்வை**
1 மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1472/2008/பே2 நாள்.31.05.2009
2 அரசாணை எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.19.12.2012
3 ஆணையாளர் (பொ) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.5734/2011/எம்சி2 நாள்.31.01.2013
4 ஆணையாளர் (பொ) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.5734/2011/எம்சி2 நாள்.21.12.2013
5 திருமதி.எம். மணிமேகலை, இளநிலை உதவியாளர், வடக்கு மண்டலம் அவர்களின் விண்ணப்பம் நாள்.16.06.2014.
6 நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட கடித ந.க.எண்.5734/2011/எம்சி2 நாள்.18.06.2014
7 திருமதி.எம். மணிமேகலை, இளநிலை உதவியாளர், வடக்கு மண்டலம் அவர்களின் விண்ணப்பம் நாள்.17.04.2015.
8 உதவி ஆணையாளர் (நிர்வாகம்) அவர்களின் குறிப்பு நாள்.08.05.2015.
9 இதே எண்ணிட்ட இவ்வலுவலக குறிப்பு நாள்.08.05.2015.
10 உதவி ஆணையாளர் (பொ), வடக்கு மண்டலம் அவர்களின் குறிப்பு நாள்.30.05.2015.
11 அரசுச் செயலாளர், சென்னை அவர்களின் கடித எண்.27274, மாந.3.96–1, நாள்.18.07.1996.
12 ஆணையாளர் அவர்களின் ஆணை நாள்.09.07.2015

––––

பார்வை 5ல் காணும் விண்ணப்பத்தில் திருமதி.எம். மணிமேகலை, இளநிலை உதவியாளர், வடக்கு மண்டலம் அவர்கள் தனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளது என்றும், தனது கணவர் இறந்து விட்டார் எனவும் தெரிவித்து, தான் கோயம்புத்தூர் மாநகராட்சியில் 25.10.2011 முதல் பணியாற்றி வருவதாகவும், தனது குழந்தைகளை கவனிப்பதற்கு யாரும் கிடையாது என்றும், அதனால் தன்னுடைய குடும்ப சூழ்நிலை காரணமாக தன்னை மதுரை மாநகராட்சிக்கு பணி மாறுதல் வழங்க ஆவன செய்யுமாறும் கோரியுள்ளார்.

பார்வை 1ல் காணும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி திருமதி.எம். மணிமேகலை அவர்கள் 04.06.2009 மு.ப. முதல் இளநிலை உதவியாளராக துடியலூர் பேரூராட்சியில் பணியமர்த்தப்பட்டுள்ளார். பார்வை 2ல் காணும் அரசாணையின்படி 25.10.2011 முதல் துடியலூர் பேரூராட்சி, கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து இம்மாநகராட்சியில் தொடர்ந்து பணிபுரிய விருப்பம் தெரிவிக்காததால் பார்வை 3ல் காணும் செயல்முறை ஆணையின்படி 31.01.2013 பிற்பகல் முதல் மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

பார்வை 4ல் காணும் செயல்முறை ஆணையின்படி மீண்டும் 23.12.2013 முதல் இம்மாநகராட்சி பணிக்கு திரும்பியுள்ளதன் அடிப்படையில் வடக்கு மண்டல அலுவலகத்தில் பணியில் சேர அனுமதித்து நாளது வரை பணிபுரிந்து வருகிறார். இதற்கிடையில் மேற்படி இடைப்பட்ட காலமான 01.02.2013 முதல் 22.12.2013 முடிய உள்ள காலத்தினை முறைப்படுத்த உத்திரவு வேண்டி பார்வை 6ல் காணும் கடித ந.க.எண்.5734/2011/எம்சி2 நாள்.18.06.2014ம் தேதிய கடிதம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

பார்வை 10ல் காணும் உதவி ஆணையாளர் (பொ), வடக்கு மண்டலம் அவர்களின் குறிப்பில் திருமதி.எம். மணிமேகலை அவர்கள் பணிபுரிந்த காலத்தில் தணிக்கைத் தடைகள், குற்றச்சாட்டு நிலுவைகள் மற்றும் முன்பண நிலுவைகள் எதுவும் இல்லை என தெரிவித்துள்ளார்.

மேலும் பார்வை 11ல் காணும் அரசுக்கடிதத்தில் ஒரு மாநகராட்சியிலிருந்து வேறு மாநகராட்சிக்கு அல்லது நகராட்சிக்கு மாற்றம் செய்ய கீழ்க்கண்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

1 ஒரு நகராட்சி அல்லது மாநகராட்சி பணியின் அலுவலர் மற்றொரு நகராட்சிக்கோ அல்லது மாநகராட்சிக்கோ மாறுதல் பெற விரும்பினால் அவர் பணிபுரியும் அந்த நகராட்சி / மாநகராட்சி ஆணையருக்குத் தான் தனது மனுவினை அனுப்ப வேண்டும்.

2 சம்பந்தப்பட்ட ஆணையர் இந்த மனுவைப் பரிசீலித்து அன்னாரை விடுவிக்கும் மன்றத் தீர்மானம் நிறைவேற்றி தீர்மான நகலுடன் மாற்றம் கோரும் நகராட்சி அல்லது மாநகராட்சி ஆணையருக்கு அந்த மனுவினை அனுப்பி வைக்க வேண்டும்.

3 மாறுதல் கோரப்பட்டுள்ள நகராட்சி அல்லது மாநகராட்சியின் ஆணையர் அங்கு பணியிடம் காலி இருந்து, அன்னாரை எடுத்துக் கொள்ளலாம் எனக் கருதினால் அதற்கான மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அந்த நகலுடன் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு எடுத்துக் கொள்ளும் நகராட்சி / மாநகராட்சி அனுப்பி வைக்க வேண்டும். நகராட்சி நிர்வாக இயக்குநர் அவைகளைப் பரிசீலித்து தனது குறிப்புகளுடன் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

4 எனினும் ஒரு மாநகராட்சியிலிருந்து மற்றொரு மாநகராட்சிக்கு மாற விரும்பினால் இரண்டு மாநகராட்சிகளும் தீர்மானம் நிறைவேற்றிய பின்னர், எடுத்துக் கொள்ளும் மாநகராட்சி இதற்கான செயற்குறிப்புடன் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

5 மாறுதல் வேண்டுபவர்கள் நகராட்சிக்கோ, மாநகராட்சிக்கோ மாறுதல் வேண்டி விண்ணப்பம் கொடுத்து அதன் நகலை அரசுக்கு அனுப்பக் கூடாது.

6 மாறுதல் விரும்பும் நபரை ஒரு நகராட்சியோ, மாநகராட்சியோ எடுத்துக் கொள்ள விரும்பவில்லையென்றால் அல்லது பணியிடம் காலியில்லையென்றால் அலுவலர் பணியாற்றும் ஆணையருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். பணியாளருக்கு ஆணையரே தக்க பதிலை அளிக்க வேண்டும். அரசுக்கு அனுப்பத் தேவையில்லை.

எனவே திருமதி.எம். மணிமேகலை, இளநிலை உதவியாளர் அவர்களுக்கு மதுரை மாநகராட்சிக்கு பணிமாறுதல் வழங்குவது தொடர்பாக மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.2499/2015/எம்சி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 201 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 3528/ 2015/ எம்.டி.4 | வார்டு எண்94 கோகுலாபுரம் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 6.50 | 02.07.15 முதலாம் அழைப்பு | 1.திரு.கே.நடராஜன் 4.90% அதிகம் 2.திருமதி. எம். சரோஜினி 6.56 % அதிகம் | 1.திரு. கே.நடராஜன் 4.86% அதிகம் (விலைக் குறைப்பிற்குபின் |
| 2 | 3458/ 2015/ எம்.டி.4 | வார்டுஎண்85 செல்வபுரம் மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 40.00 | 01.07.15 முதலாம் அழைப்பு | 1).திரு. என். குருவாயூரப்பன் 4.95 % அதிகம் 2).திரு.கே. கோவிந்தராஜ் 11.36 % அதிகம் | திரு.என். குருவாயூரப்பன் 4.90 % அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 3 | 3512/ 2015/ எம்.டி.4 | தெற்கு மண்டலம் வெள்ளலூர் குப்பை கிடஙகில் உள்ள மண்புழு உரக்கிடஙகிற்கு சேமிப்பு மற்றும் மெருகேற்றும் கிடஙகுகள் கட்டுதல் | 75.00 | 08.07.15 முதலாம் அழைப்பு | 1.தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி.லிட் 5.01% அதிகம் 2 தி/ள். எஸ்.பி பில்டர்ஸ் 7.80 % அதிகம் | தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி.லிட் 4.98% அதிகம் (விலைக் குறைப்பிற்குபின்) |
| 4 | 3511/ 2015/ எம்.டி.4 | தெற்கு மண்டலம் வெள்ளலூர் குப்பை கிடஙகில் உள்ள மண்புழு உரக்கிடஙகில் அலுவலக கட்டிடம் மற்றும் குப்பை வாஙகும் கிடஙகு கட்டுதல் | 75.00 | 08.07.15 முதலாம் அழைப்பு | 1.தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி.லிட் 5.00% அதிகம் 2 தி/ள். எஸ்.பி பில்டர்ஸ் 7.78 % அதிகம் | தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி.லிட் 4.98% அதிகம் (விலைக் குறைப்பிற்குபின்) |
| 5 | 3843/ 2015/ எம்.டி.4 | தெற்கு மண்டலம் வெள்ளலூர் குப்பை கிடஙகில் தார்சாலை அமைத்தல் | 75.00 | 08.07.15 முதலாம் அழைப்பு | 1.தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி.லிட் 5.01% அதிகம் 2 தி/ள். எஸ்.பி பில்டர்ஸ் 7.13 % அதிகம் | தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி.லிட் 4.98% அதிகம் (விலைக் குறைப்பிற்குபின்) |
| 6 | 3841/ 2015/ எம்.டி.4 | தெற்கு மண்டலம் வெள்ளலூர் குப்பை கிடஙகில் உள்ள மண்புழு உர தயாரிப்பு பகுதியில் கிழக்கு பக்கம் உள்ள மண்புழு உரத் தொட்டிகளுக்கு கூரைகள் அமைத்தல் | 75.00 | 08.07.15 முதலாம் அழைப்பு | 1.தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி.லிட் 5.00% அதிகம் 2 தி/ள். எஸ்.பி பில்டர்ஸ் 6.08 % அதிகம் | தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி.லிட் 4.98% அதிகம் (விலைக் குறைப்பிற்குபின்) |
| 7 | 3840/ 2015/ எம்.டி.4 | தெற்கு மண்டலம் வெள்ளலூர் குப்பை கிடஙகில் உள்ள மண்புழு உர தயாரிப்பு பகுதியில் மேற்கு பக்கம் உள்ள மண்புழு உரத் தொட்டிகளுக்கு கூரைகள் அமைத்தல் | 75.00 | 08.07.15 முதலாம் அழைப்பு | 1.தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி.லிட் 5.01% அதிகம் 2 தி/ள். எஸ்.பி பில்டர்ஸ் 6.37 % அதிகம் | தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் பி.லிட் 4.98% அதிகம் (விலைக் குறைப்பிற்குபின்) |
| 8 | 3610/ 2015/ எம்.டி.4 | தெற்கு மண்டலம் உக்கடம் பெரியகுள கரையில் உள்ள சாலை ஓர பூஙகாவிற்கு ஆழ்குழாய் கிணறு அமைத்து மோட்டார் மின் வசதிகள் மற்றும் சொட்டு நீர் பாய்ச்சும் வசதி ஏற்படுத்துதல் | 60.00 | 06.07.15 முதலாம் அழைப்பு | 1.தி/ள்.வர்தான் இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் 6.01% அதிகம் 2 தி/ள். எஸ்.பி பில்டர்ஸ் 7.10 % அதிகம் | தி/ள். வர்தான் இன்ப்ராஸ்டிரக்சர்ஸ் 4.98% அதிகம் (விலைக் குறைப்பிற்குபின்) |

மேற்காண் பட்டியலில் வரிசை எண்கள் 1 முதல் 8 வரை உள்ள பணிகளுக்கு அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கிய முன்அனுமதிக்கு பின்னேற்பும், மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு:

இப்பணிகளுக்கு குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3528/2015/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 202 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 5**

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள ''மிடுக்கான நகரம்'' (Smart City) திட்டத்தில் பங்கேற்க 31.07.15 அன்று நடைபெற்ற மாநில அளவிலான வழி நடத்தும் குழுவால் தெரிவு செய்யப்பட்டு TUFIDCO மூலம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இந்தியாவில் 100 நகரங்களில் பல்வேறு பணிகள் 5 ஆண்டுகளில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதல் ஆண்டில் 20 நகரங்களும் அடுத்த இரு ஆண்டுகளில் 40 நகரங்கள் வீதமும் தெரிவு செய்யப்படவுள்ளது.

நகரஙகளை தெரிவு செய்ய அறிவிக்கப்பட்ட நகரங்களுக்கிடையே போட்டி அடிப்படையில் நகரங்கள் தெரிவு செய்யப்படும். அதில் பங்கேற்று தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மாநில உயர்நிலை வழிநடத்தும் குழுவின் ஒப்புதலுடன் மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். மத்திய அரசு இத்திட்ட அறிக்கையை 100 நாட்களுக்குள் சமர்பிக்க அறிவுறுத்தியுள்ளது. இதனை கருத்திற் கொண்டு குடிநீர் மேலாண்மை, திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, நகர்ப்புற போக்குவரத்து மேலாண்மை, மின் ஆளுமை மற்றும் பொது மக்கள் சேவை முதலான திட்டங்கள் செயல்படுத்த

அ. மாநகராட்சி சார்பில் பொதுவான ஒப்பந்தப்புள்ளி கோருதல்.

ஆ. மாநகராட்சிக்கு தேவையான பிரேரணைகளைதயார்செய்வதற்கு உதவியாக இருக்க, மத்திய அரசின் மூலம் தேர்வு செய்யப்பட்ட பட்டியலில் உள்ள கலந்தாலோசகர்களை ஒப்பந்தம் மூலம் தேர்வு செய்தல்.

இ. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்தல் மற்றும் தகுதியான கலந்தாலோசகர்களை தேர்வு செய்து பரிந்துரை செய்தல்.

ஆகிய பணிகளை மாநகராட்சி சார்பில் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு நிறுவனத்திற்கு (TUFIDCO) அனுமதி வழங்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.5782/2015/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 203 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 6**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.13க்கு உட்பட்ட தடாகம் பிரதான சாலையானது அரசினர் தொழில்நுட்ப கல்லூரி, அவிலா கான்வென்ட் மற்றும் பாரதி மெட்ரிகுலேசன் பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ள போக்குவரத்து அதிகம் உள்ள சாலையாகும்.

நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான இச்சாலையில் தற்போது சாலையை அகலபடுத்துதல் மற்றும் கேபிள் பதித்தல் போன்ற பணிகள் முடிவடைந்து விட்டன. மேலும் இச்சாலையின் கிழக்குப் பகுதியில் JNNURM திட்டத்தின் கீழ் மூடுபலகையுடன் சாலையோர மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கு பகுதியில் ஏற்கனவே உள்ள வடிகாலானது சுமார் 20 வருடத்திற்கு முன் அமைக்கப்பட்டு, தற்போது பெரும்பாலான பகுதிகள் சேதமடைந்துள்ளது.

எனவே, வணக்கத்துக்குரிய மேயர், ஆணையாளர் மற்றும் உயர் அதிகாரிகளின் நேராய்வில் அறிவுறுத்தப்பட்டபடியும், மாமன்ற உறுப்பினர் மற்றும் பொது மக்களின் வேண்டுகோளின்படியும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு, பாதசாரிகளின் பாதுகாப்பு கருதியும், **மேற்குப் பகுதியில் மூடுபலகையுடன் ஆர்.சி.சி. வடிகால் (அவிலா கான்வென்ட் முதல் பாரதி மெட்ரிகுலேசன் பள்ளி எதிர்புறம் வரை)** அமைக்க ரூ.67,50,000/—க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.8949/2014/எம்டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 204 நாள் 19.10.2015</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 7**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.14க்கு உட்பட்ட தடாகம் பிரதான சாலையானது அரசினர் தொழில்நுட்ப கல்லூரி, அவிலா கான்வென்ட் மற்றும் பாரதி மெட்ரிகுலேசன் பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ள போக்குவரத்து அதிகம் உள்ள சாலையாகும்.

நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான இச்சாலையில் தற்போது சாலையை அகலப்படுத்துதல் மற்றும் கேபிள் பதித்தல் போன்ற பணிகள் முடிவடைந்து விட்டன. மேலும் இச்சாலையின் கிழக்குப் பகுதியில் JNNURM திட்டத்தின் கீழ் மூடுபலகையுடன் சாலையோர மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கு பகுதியில் ஏற்கனவே உள்ள வடிகாலானது சுமார் இருபது வருடத்திற்கு முன் அமைக்கப்பட்டு, தற்போது பெரும்பாலான பகுதிகள் சேதமடைந்துள்ளது.

எனவே, வணக்கத்துக்குரிய மேயர், ஆணையாளர் மற்றும் உயர் அதிகாரிகளின் நேராய்வில் அறிவுறுத்தப்பட்டபடியும், மாமன்ற உறுப்பினர் மற்றும் பொது மக்களின் வேண்டுகோளின்படியும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு, பாதசாரிகளின் பாதுகாப்பு கருதியும், **மேற்குப் பகுதியில் மூடுபலகையுடன் ஆர்.சி.சி. வடிகால் (கோவில்மேடு நுழைவு வாயில் முதல் அம்பேத்கர் சாலை சந்திப்பு வரை)** அமைக்க ரூ.67,00,000/—க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.8948/2014/எம்டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 205 நாள் 19.10.2015</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வார்டு எண் 1, துடியலூர் எரிவாயு (L.P.G.) மயானம் தி./ள். ஈஷா ∴பவுண்டேஷன், கோயம்புத்தூர் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு பெறப்படும் தொகையினை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதி, ஏற்கனவே எரிவாயு உருளைகளுக்கு என தி.ள். சிந்தாமணி கோ-ஆப்ரேடிவ் சூப்பர் மார்க்கெட், கோயம்புத்தூர் அவர்களுக்கு மாநகராட்சியால் செலுத்தப்பட்ட தொகைக்கு பின்னேற்பும், தகனத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டு முன்னனுமதி வழங்கியதற்கு பின்னேற்பும் மற்றும் தற்சமயம் தி./ள். சிந்தாமணி கோஆப்ரேடிவ் சூப்பர் மார்க்கெட், கோயம்புத்தூர் அவர்களுக்கு நிலுவையில் உள்ள தொகையை செலுத்த அனுமதி கோருவது – தொடர்பாக

பார்வை :

1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண். 228, நாள். 13-11-2008.
2. மாமன்ற தீர்மானம் எண்.293, நாள். 14-11-2013.
3. இவ்வலுவலக கடித எண். 06700/2013/(எம்.இ.4)டி1(வ), நாள். 05-12-2013 (நகராட்சி நிர்வாக ஆணையத்திற்கு அனுப்பப்பட்டது)
4. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள் 25-11-2014.
5. இவ்வலுவலக உத்திரவு நாள் 26.11.2014.
6. மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையிலான கூட்டத்தில் உபயோகிப்பாளரிடமிருந்து பெறப்படும் தகனத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டது நாள் 11-8-2015.
7. மாண்புமிகு மேயர் அவர்களின் முன்னனுமதி நாள் 17-8-2015.
8. இவ்வலுவலக கடித எண். 06700/2013/(எம்.இ.4)டி1(வ) நாள் 17-8-2015.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 1, பார்வை 2-ல் காண் மாமன்ற தீர்மானத்தின்படி நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதியுடன் துடியலூர் எரிவாயு மயானத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பார்வை 3-ன் படி தி./ள். ஈஷா ∴பவுண்டேஷன், கோயம்புத்தூர் அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டி 05-12-2013-ல் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து ஒரு வருட காலமாக காத்திருந்த பின்னர் பொது மக்களின் நலன் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் பார்வை 4-ல் காண் ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படியும் துடியலூர் எரிவாயு (L.P.G.) மயானம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்காக தி./ள். ஈஷா ∴பவுண்டேஷன், கோயம்புத்தூர் அவர்களுக்கு கடந்த டிசம்பர் 2014 முதல் நஞ்சுண்டாபுரம் எரிவாயு மயானத்திற்கு போடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பார்வை 5-ல் காண் பணி உத்தரவு வழங்கப்பட்டு மேற்படி நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

எரிவாயு மயானம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு, எரிவாயு உருளைகளையும் மாநகராட்சியின் செலவில் வழங்கப்பட்டு வருகிறது. தி./ள். ஈஷா பவுண்டேஷன், கோயம்புத்தூர் அவர்களால் பரிட்சார்த்த அடிப்படையில் 06-11-2014 முதல் 14-11-2014வரை ஏழு உடல்கள் எரியூட்டப்பட்டுள்ளன. கடந்த நவம்பர் 2014 முதல் மார்ச் 2015 வரையிலான 5 மாதங்களுக்கு 282 உடல்கள் எரியூட்டப்பட்டதற்கு தொகை ரூ.2,82,000/- பெறப்பட்டுள்ளது. எரிவாயு உருளைகளுக்கான செலவாக கடந்த நவம்பர் 2014 முதல் மார்ச் 2015 வரையில் ரூ.1,90,850/-ஐ தி./ள். சிந்தாமணி கோஆப்ரேடிவ் சூப்பர் மார்க்கெட், கோயம்புத்தூர் அவர்களுக்கு மாநகராட்சியால் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால், தொண்டு நிறுவனத்தின் அறிக்கையின் அடிப்படையில் மேற்படி எரிவாயு மயானத்தின் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளுக்கு நவம்பர் 2014 முதல் மார்ச் 2015 வரையிலான காலத்திற்கு சுமார் ரூ. 7,00,000/- மேல் செலவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி./ள். ஈஷா ∴பவுண்டேஷன், கோயம்புத்தூர் அவர்களால் எரியூட்டு தொகையாக பெறப்பட்டதில் மாநகராட்சி பங்காக ஏதும் செலுத்தப்படுவதில்லை என தணிக்கை பத்தி 7/2015-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், தி./ள். சிந்தாமணி கோஆப்ரேடிவ் சூப்பர் மார்க்கெட், கோயம்புத்தூர் அவர்களால் வழங்கப்பட்ட எரிவாயு உருளைகளுக்கான தொகை ரூ.64,720/- செலுத்தப்படாமல் உள்ளது. அதனை தொடர்ந்து தற்சமயம் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்ட உருளைகளுக்கான தொகையும் வழங்க வேண்டியுள்ளது.

பார்வை 6-ல் காண் மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையிலான கூட்டத்தில் எரிவாயு மயானம் உபயோகிப்பாளரிடமிருந்து பெறப்படும் தொகையினை பார்வை காண் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி நிர்ணயம் செய்யப்பட்டது. பார்வை -7 ல் காண் மாண்புமிகு மேயர் அவர்களின் முன்னனுமதி வாயிலாக கூட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொகையினை நடைமுறைப்படுத்த தி./ள். ஈஷா ∴பவுண்டேஷன், கோயம்புத்தூர் அவர்களுக்கு பார்வை-8 ல் காண் கடிதம் அனுப்பப்பட்டது.

எனவே, தி./ள். ஈஷா ∴பவுண்டேஷன், கோயம்புத்தூர் அவர்களால் பெறப்படும் தகனத் தொகை ரூ. 1750/- ஐ இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவுகளுக்கு (அனைத்து இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவுகளும் அடங்கும்) ஈடுகட்டுவதற்கு செலவிட அனுமதி வழங்கப்பட்டது. மாநகராட்சி எரிவாயு உருளை, மின்சாரம் போன்ற செலவுகள் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும். அரசாணையின் அடிப்படையில் தகனத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் தி./ள். ஈஷா ∴பவுண்டேஷன், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு பங்கு தொகை ஏதும் செலுத்த வேண்டியதில்லை.

எனவே தற்சமயம், தகனத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்த மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்றுள்ள நிலையில், மாநகராட்சியால் ஏற்கனவே எரிவாயு உருளைகளுக்கான செலவாக கடந்த நவம்பர் 2014 முதல் மார்ச் 2015 வரையில் ரூ. 1,90,850/-ஐ தி./ள். சிந்தாமணி கோ-ஆப்ரேடிவ் சூப்பர் மார்க்கெட், கோயம்புத்தூர் அவர்களுக்கு செலுத்தப்பட்டதற்கு பின்னேற்பும், பார்வை- 6-ல் காண் தகனத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு முன்அனுமதி வழங்கியதற்கு பின்னேற்பும், தி./ள். சிந்தாமணி கோ-ஆப்ரேடிவ் சூப்பர் மார்க்கெட், கோயம்புத்தூர் அவர்களுக்கு நாளது வரை வழங்க வேண்டிய நிலுவைத் தொகைக்கு அனுமதி வேண்டியும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 6700/ 2013/ (எம்.இ4)டி1(வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 206 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 9**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| **1** | **5491/ 2015/ எம்.டி.3** | வார்டு எண்.37 அவினாசி சாலையில் பி.எஸ்.ஜி.கலைக் கல்லூரி மற்றும் அரவிந்த கண் மருத்துவமனை அருகே நடைபாதை மேம்பாலம் அமைத்தல் | **75.00** | **05.08.15** முதலாம் அழைப்பு | **1).திரு. ஆர். உமாபதி** 7.14% அதிகம் **2)தி/ள்.என்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ்** 4.99% அதிகம் | **தி/ள்.என்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ்** 4.95% அதிகம் **(விலை குறைப்பிற்கு பின்)** |

மேலும், மேற்காண் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மேற்படி பணியினை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளில் மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்

ந.க.எண்.**5491/2015/**எம்.டி.**3**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 207 நாள் 19.10.2015**

வார்டு எண் 36 என திருத்தம் செய்து அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 10**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு **15.09.2015** அன்று பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 5595/ 2015/ எம்.டி.5 | கோயம்புத்தூர் மாநகராட்சி பொறியியல் பிரிவு வளர்ச்சி பணிகள் நடைபெறுவதற்கு ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர்கள் அமர்த்துதல் பணி | **45.90** | 18.08.15 முதலாம் அழைப்பு | 1).). தி/எ்.வர்தான் இன்ப்ராஸ்ட்ரக்சர் 6.00 % அதிகம்<br>2) தி/எ்.கே.சி.பி. இஞ்சினியர்ஸ் பி லிட் 6. 83 % அதிகம் | தி/எ்.வர்தான் இன்ப்ராஸ்ட்ரக்சர் 4.98 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 2 | 9175/ 2014/ எம்.டி.5 | மத்தியமண்டலத்திற்கு உட்பட்ட பூங்காக்களை ஒருவருடகாலத்திற்கு பராமரித்தல் பணி | **41.80** | 18.08.15 இரண்டாம் அழைப்பு | திரு.கே. ராமசாமி 5.02 % அதிகம் | திரு.கே. ராமசாமி 4.86 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்

ந.க.எண். 5595 /2015/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 208 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 11**

| | |
|---|---|
| பொருள்: | நில உரிமை மாற்றம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கல்லாமேடு குடிசைப்பகுதியில் வசித்து வரும் 76 ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மாநகராட்சிக்கு சொந்தமான T.S.No.3, பிளாக்.10, வார்டு.43 பகுதியில் உள்ள 0.73 ஏக்கர் (அ) 0.2965 ஹெக்டேர் இடத்தில் குடியிருப்பு வீடுகள் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் கட்டுதல் – இடத்தினை குடிசை மாற்று வாரியத்திற்கு வழஙக அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக. |
| பார்வை: | செயற் பொறியாளர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், கோவை மண்டலம் கடித எண்.1993/PA/SCB/CBE/2015, நாள்.06.08.2015. |

*******

பார்வையில் காண் செயற் பொறியாளர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், கோவை மண்டலம் அவர்களின் கடிதத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கல்லாமேடு குடிசைப்பகுதியில் வசித்து வரும் 76 ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மாநகராட்சிக்கு சொந்தமான T.S.No.3, பிளாக்.10, வார்டு.43 பகுதியில் உள்ள 0.73 ஏக்கர் (அ) 0.2965 ஹெக்டேர் இடத்தில் குடியிருப்பு வீடுகள் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் கட்டி மேற்படி ஆக்கிரமிப்பாளர்களை மீண்டும் அதே இடத்தில் வாழத்தக்க வகையில் செய்வதற்கு, மேற்படி மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து தரக் கோரப்பட்டுள்ளது.

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கல்லாமேடு குடிசைப்பகுதியில் வசித்து வரும் 76 ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மாநகராட்சிக்கு சொந்தமான T.S.No.3, பிளாக்.10, வார்டு.43 பகுதியில் உள்ள 0.73 ஏக்கர் (அ) 0.2965 ஹெக்டேர் இடத்தில் குடியிருப்பு வீடுகள் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் கட்டுவதற்கு நிலத்தினை குடிசைமாற்று வாரியத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்ய அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.7377/2015/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 209 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 12**

பொருள்: வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்பு திட்டம் – பேரூர் வட்டம் – குனியமுத்தூர் கிராமம் – க.ச.18/5 (நத்தம் க.ச.877) நத்தம் புறம்போக்கு – 12261 ச.மீ. பரப்பு – 10 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வரும் 227 ஆக்கிரமிப்புதாரர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் நடவடிக்கைகள் – மாநகராட்சியின் இசைவினை தெரிவித்தல் – மாமன்ற பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

பார்வை: வட்டாட்சியர், பேரூர் அவர்களின் கடிதம் ந.க.9051/2014/அ6, நாள்.02.01.2015.

******

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், குனியமுத்தூர் கிராமத்தில் க.ச.18/5 (நத்தம் புல எண்.877) நத்தம் புறம்போக்கில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வரும் திருமதி.சுபாஷினி, க/பெ.குரு உள்ளிட்ட 227 நபர்களுக்கு (ஒப்படை பரப்பு 12261 ச.மீ) பட்டாக்கள் வழங்க நடவடிக்கையின் பொருட்டு கோயம்புத்தூர் மாநகராட்சியின் இசைவினை தீர்மான வடிவில் அளித்திட ஆவண செய்ய பார்வையில் காண் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

வீட்டுமனைப்பட்டா வழஙகும் சிறப்பு திட்டத்தின் கீழான மேற்படி பயனாளிகளின் குடியிருப்பு பகுதி குனியமுத்தூர், சுகுணாபுரம் குடியிருப்பு நத்தம் பகுதியில் அமைகிறது. இப்பகுதி கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட எல்லைப்பகுதியாகும். எனவே, பார்வையில் காண் கடிதத்தில் கோரியபடி, வீட்டுமனைப்பட்டா வழஙகும் சிறப்புத் திட்டத்தில் கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், குனியமுத்தூர் கிராமத்தில் க.ச.18/5 (நத்தம் புல எண்.877) நத்தம் புறம்போக்கில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வரும் 227 ஆக்கிரமிப்பாளர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் நடவடிக்கையின் பொருட்டு கோயம்புத்தூர் மாநகராட்சியின் இசைவினை தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.712 /2015/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 210 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 13**

பொருள்: வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்பு திட்டம் – பேரூர் வட்டம் – குனியமுத்தூர் கிராமம் – க.ச.18/4 (நத்தம் க.ச.687/3 உள்ளிட்ட புலங்கள்) காலியிடம், நத்தம் காலியிடம், காலிமனை எனக் குறிப்பிட்டவை – 8998.5 ச.மீ. பரப்பு – 10 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வரும் 181 ஆக்கிரமிப்புதாரர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் நடவடிக்கைகள் – மாநகராட்சியின் இசைவினை தெரிவித்தல் – மாமன்ற பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

பார்வை: வட்டாட்சியர், பேரூர் அவர்களின் கடிதம் ந.க.504/2015/அ6, நாள்.05.01.2015.

******

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், குனியமுத்தூர் கிராமத்தில் க.ச.18/4 நத்தம் புறம்போக்கில் காலியிடம், நத்தம் காலியிடம், காலி மனை என குறிப்பிடப்பட்ட இடங்களில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து வரும் திருமதி.மங்கையர்க்கரசி, க/பெ.புஷ்பராஜ் உள்ளிட்ட 181 நபர்களுக்கு (ஒப்படை பரப்பு 8998.5 ச.மீ) பட்டாக்கள் வழங்க நடவடிக்கையின் பொருட்டு கோயம்புத்தூர் மாநகராட்சியின் இசைவினை தீர்மான வடிவில் அளித்திட ஆவண செய்ய பார்வையில் காண் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்பு திட்டத்தின் கீழான மேற்படி பயனாளிகளின் குடியிருப்பு பகுதி குனியமுத்தூர், சுகுணாபுரம் குடியிருப்பு நத்தம் பகுதியில் அமைகிறது. இப்பகுதி கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட எல்லைப்பகுதியாகும். எனவே, பார்வையில் காண் கடிதத்தில் கோரியபடி, வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத் திட்டத்தில் கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், குனியமுத்தூர் கிராமத்தில் க.ச.18/4 நத்தம் புறம்போக்கில் காலியிடம், நத்தம் காலியிடம், காலி மனை என குறிப்பிடப்பட்ட இடங்களில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து வரும் 181 ஆக்கிரமிப்பாளர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் நடவடிக்கையின் பொருட்டு கோயம்புத்தூர் மாநகராட்சியின் இசைவினை தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.712 /2015/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 211 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 14**

பொருள்: சாலைகள் – கோயம்புத்தூர் மாநகராட்சி - காந்திபுரம் பகுதியில் நெடுஞ்சாலைத்துறை மூலம் மேம்பாலம் கட்டுதல் – பணி மேற்கொள்வதற்காக மாநகராட்சி சாலைகளை 300மீ நீளத்திற்கு நெடுஞ்சாலைத் துறைக்கு மாமன்ற தீர்மானத்தின்படி நிரந்தரமாக ஒப்படைக்க அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டது – கூடுதலான நீளங்களில் சாலைகளை நிரந்தரமாக ஒப்படைக்க கோரியது – மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

பார்வை: கோட்டப் பொறியாளர் (நெ), க(ம)ப, கோவை அவர்களின் க.எண்.1090/2015/இவஅ1, நாள்.19.03.2015.

********

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட காந்திபுரம் பகுதி சாலைகளில், மேம்பாலம் கட்டும் பணி மேற்கொள்வதற்காக மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட பட்டியலில் காணும் 3 சாலைகளை தற்காலிகமாக நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைப்பு செய்ய மாநகர மன்ற தீர்மானம் எண்.256, நாள்.25.10.2012 நிறைவேற்றப்பட்டது. இதனை தொடர்ந்து நெடுஞ்சாலை துறையினர், நெடுஞ்சாலைத் துறை சட்டம் 2001-ன்படி, இம்மூன்று சாலைப் பகுதிகளையும் இத்துறைக்கு நிரந்தரமாக ஒப்படைத்தால் மட்டுமே சம்பந்தப்பட்ட இடங்களில் மேம்பாலம் கட்ட இயலும் எனத் தெரிவிக்கப்பட்டதன் பேரில் மேற்படி 3 சாலைகளையும் தலா 300மீ நீளத்திற்கு நிரந்தரமாக ஒப்படைக்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாநகர மன்றத் தீர்மானம் எண்.50, நாள்.21.05.2013 நிறைவேற்றப்பட்டு அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

தற்போது பார்வையில் காண் கோட்டப் பொறியாளர் (நெ), க(ம)ப கடிதத்தில், காந்திபுரம் பகுதியில் மேம்பாலம் கட்டும் பணிக்கு கீழ்கண்ட 3 சாலைகளுக்கும் கூடுதலான நீளங்களை நிரந்தரமாக நெடுஞ்சாலை துறைக்கு விரைவில் ஒப்படைப்பு செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண் | மேம்பாலம் அமையவுள்ள சாலை | மாமன்ற ஒப்புதல் வழங்கப்பட்ட சாலையின் நீளம் | தற்போது கூடுதலாக கோரும் சாலையின் நீளம் | மொத்த நீளம் |
|---|---|---|---|---|
| 1. | வ.உ.சி. பார்க் சாலை (300மீ) டாக்டர்.நஞ்சப்பா சாலையிலிருந்து | 300 மீ | – | 300 மீ |
| 2. | நூறடி சாலை – ஜி.பி. சந்திப்பிலிருந்து காந்திபுரம் 7ம் வீதி வரை | 300 மீ<br>காந்திபுரம் 3-ம் வீதிவரை | 300 மீ | 600 மீ |
| 3. | சின்னசாமி நாயுடு சாலை (ஐயப்பன் கோயில் சாலை) ஜி.பி.சந்திப்பிலிருந்து. | 300 மீ | 400 மீ | 700 மீ |

எனவே, நெடுஞ்சாலை துறை கேட்டுக் கொண்டதன் பேரிலும், அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் நே.மு.க.எண்.10454/எம்.சி.2/2013–1, நாள்.08.05.2013–ல் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையிலும், மேற்படி சாலைகளை காந்திபுரம் பகுதி மேம்பாலம் கட்டும் பணிக்காக நிரந்தரமாக ஒப்படைப்பு செய்ய அரசுக்கு திருத்திய பிரேரணை (Revised Proposal) அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.4755/2012/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 212 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 15**

பொருள்: நில பயன்பாடு மாற்றம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.08.2014 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள் – 500 தொழிலாளர்களுக்கு தங்கும் அறைகள் (Dormitories) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தால் பொதுப்பணித்துறை மூலம் கட்டுதல் – குடியிருப்புகளுக்கு அருகில் உள்ள பொது ஒதுக்கீடு பகுதி (Reserve site)ல் இட ஒதுக்கீடு செய்யக்கோரியது – பொது ஒதுக்கீடு இடத்தினை ஒதுக்கீடு செய்வது தொடர்பாக நில பயன்பாடு மாற்றம் குறித்து நகர் ஊரமைப்பு துறைக்கு பிரேரணை அனுப்பவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலம் அரசு அனுமதி பெற்று, தொழிலாளர் நல துறைக்கு, நடப்பு சந்தை மதிப்பில் நிலம் ஒதுக்கீடு செய்ய – பிரேரணை அனுப்ப – ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைத்தல் – தொடர்பாக.

பார்வை: தொழிலாளர் இணை ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். ஈ/5518/2014, நாள்.01.07.2015.

*******

பார்வையில் காண் கோயம்புத்தூர் தொழிலாளர் இணை ஆணையர் அவர்களின் கடிதத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் அறிவிப்புகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.08.2014 அன்று வெளியிடப்பட்டதில், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தால் பொதுப்பணித்துறை மூலம் 500 தங்கும் அறைகள் (Dormitories) கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யபட்டுள்ள இடத்தில் கட்டிடம் கட்டப்படவுள்ளது. மேலும், கவுண்டம்பாளையம் கிராமம் புல எண்.4, இடம் துடியலூர் ITI வளாகத்தின் பின்பகுதியில் அமைகிறது. மேட்டுப்பாளையம் சாலையில் இருந்து ITI கல்வி நிறுவன வாளகத்திற்குள் நுழைந்து மேற்காண் இடத்தை சென்றடைய வேண்டி உள்ளது. இதனால், நேரடியாக உத்தேச கட்டுமானத்திற்கு செல்ல வழிவகை இல்லை. உத்தேச கட்டுமானத்திற்கு ITI மாணவர்கள் பாதிப்பு இல்லாத வகையில், சேரன் காலனி மனைப்பிரிவு பிரதான சாலையில் இருந்து, கட்டுமான தொழிலாளர்கள் தங்கும் கட்டிடத்திற்கு நேரடியாக செல்லும் வகையில், சேரன் நகர் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு பொது ஒதுக்கீடு இடத்தில் 17.4m x 9.15m அளவில் 1713 சதுரடி (அ) 3.93 சென்ட் பரப்பளவு நிலத்தினை ஒதுக்கீடு செய்து ஆணையர் வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அங்கிகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள பொது ஒதுக்கீடு இடங்களை எந்த பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளதோ அதைத்தவிர வேறு எந்த பயன்பாட்டிற்கும் பயன்படுத்தக் கூடாது என நகர் ஊரமைப்பு துறை உத்திரவிட்டுள்ளதாலும், இது தொடர்பாக பல சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்புகளிலும் பொது ஒதுக்கீடு இடத்தினை வேறு பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யக்கூடாது எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இருப்பினும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சட்டப்பேரவை விதி 110 அறிவிப்பின் அடிப்படையில் 500 தொழிலாளர்களுக்கு தங்கும் அறைகள் (Dormitories) கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் கட்டப்படவுள்ள கட்டிட வளாகத்திற்கு இணைப்பு ஏற்படுத்த கவுண்டம்பாளையம் கிராமம் புல எண்.4, சேரன் கூட்டுறவு வீடு கட்டும் சொசைட்டி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு பொது ஒதுக்கீடு இடத்தில் தென்வடலாக 17.4m x 9.15m இட ஒதுக்கீடு செய்வது தொடர்பாக, பொது ஒதுக்கீடு இடத்தின் நில பயன்பாடு மாற்றம் குறித்து உரிய ஆணை பிறப்பிக்கக் கோரி நகர் ஊரமைப்பு துறைக்கு பிரேரணை அனுப்பவும், நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலம் அரசு அனுமதி பெற்று தொழிலாளர் நல துறைக்கு, நடப்பு மார்க்கெட் விலை மதிப்பு பெற்று ஒப்படைப்பு செய்யவும் உத்தேசம் அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.8293/2015/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 213 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 16**

பொருள்: தமிழ்நாடு சட்டமன்ற மனுக்கள் குழு (2012 – 2013) – கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு.கோவை கண்ணையன் (எ) வே.பழனிச்சாமி, அவர்களின் மனு எண்.6400 – வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.26ல் உள்ள வெள்ளக்கிணறு கிராமம், தாய்சேய் நல விடுதிக்கு பின்புறம் அரசுக்கு சொந்தமான காலியாக உள்ள இடத்தில் சமுதாய நலக்கூடம் கட்டித் தரக்கோரியது – மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

******

தமிழ்நாடு சட்டமன்ற மனுக்கள் குழு (2012 – 2013) அறிக்கையில், மனு எண்.6400ல் திரு.கோவை கண்ணையன் (எ) வே.பழனிச்சாமி அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.26ல் உள்ள வெள்ளக்கிணறு கிராமம், அம்பேத்கார் வீதிக்கு மேற்கில் தாய்சேய் நல விடுதிக்கு பின்புறம் அரசுக்கு சொந்தமான காலியாக உள்ள மந்தைவெளி புறம்போக்கு இடத்தில் சமுதாய நலக்கூடம் கட்டித் தரக்கோரியது தொடர்பாக இறுதி அறிக்கை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, வெள்ளக்கிணர் கிராமம் க.ச.எண்.189/4ல் அரசு புறம்போக்கு என்ற வகைப்பாட்டில் உள்ள 42 சென்ட் இடத்தில் மாநகராட்சி மூலம் சமுதாயக் கூடம் அமைக்க மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெற கடிதம் அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- அனுமதிக்கலாம். ந.க.எண்.10859/2012/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 214 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 17**

பொருள்: நில ஒப்படை – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோவை வடக்கு வட்டம், அனுப்பர்பாளையம் கிராமம் டி.எஸ்.எண்.1091/4 பாகம், காலையில் 152 சதுரடி இடத்தினை திருமதி.ராஜேஸ்வரி அவர்களின் வாரிசுதாரர்களுக்கு நிலக்கிரயத்திலிருந்து திரும்ப ஒப்படைக்கக் கோரியது – அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலத்திற்குட்பட்ட கோவை வடக்கு வட்டம், அனுப்பர்பாளையம் கிராமம் டி.எஸ்.எண்.1091/4 பாகம், காலையில் 152 சதுரடி இடத்தினை திருமதி.ராஜேஸ்வரி அவர்களின் வாரிசுதாரர்களுக்கு நிலக்கிரயத்திலிருந்து திரும்ப ஒப்படைக்கக் கோரி திருமதி.M.செந்தாமரை, அரசு கூடுதல் செயலர், உள்துறை (திருமதி.ராஜேஸ்வரி அவர்களின் மகள்) அவர்கள் கோரியுள்ள மேற்படி இடம் சதுரடிக்கு 8 அணா பெற்றுக் கொண்டு முந்தைய நகராட்சிக்கு விலைக்கிரயம் மூலம் கொடுத்துள்ளதாகவும், இந்த இடத்தில் எவ்வித பணியும் செய்யப்படாமல் உள்ளதால் இடத்தினை மனுதாரருக்கே திரும்பி வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மனுதாரர் கோரும் இடம் நகரளவு வார்டு எண்.A1, பிளாக் எண்.17, நகரளவு எண்.1091/4ல் 152 சதுரடி பரப்பில் உள்ளது. மனையிடத்தின் முன்பு மாநகராட்சியால் அமைக்கப்பட்ட தார்சாலை உள்ளது. மேற்படி இடத்தின் முன்புற சாலை அகலம் போதுமானதாக உள்ளது. இவ்விடம் மாநகராட்சியால் கையகப்படுத்தப்பட்டு மீண்டும் உரிமையாளருக்கே குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. குத்தகை தொகையாக சதுரடிக்கு 10 பைசா வீதம் 1985ம் வருடம் முதல் 1997 வரை செலுத்தப்பட்டும், தற்சமயம் வரை அவர்களின் பராமரிப்பிலும் உள்ளது.

எனவே, இந்நிலையில் நிலத்தின் உரிமையாளரின் வாரிசுகளுக்கு மீண்டும் உரிமை மாற்றம் செய்யக் கோரிய 10 அடி சந்தினை ஒட்டி மனுதாரரின் 152 ச.அடி முக்கோண வடிவு இடம், போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் பயன்பாடு செய்ய இயலாத வகையில் அமைவதால், அவ்விடம் மாநகராட்சிக்கு தேவையில்லாத நிலையில் இவ்விடத்தினை திரும்ப வழங்க அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.1540/2014/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 215 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

**பொருள்:** நிலமாற்றம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் (வடக்கு) வட்டம் பகுதியில் உள்ள கிராமங்களில் வருவாய் துறைக்கு சொந்தமான இடங்களில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக குடியிருப்புகள் கட்டுவதற்கு முன்நுழைவு அனுமதி வழங்க மாநகராட்சியின் ஆட்சேபனையின்மை தெரிவிக்கப்பட்டது – திருத்திய மாநகராட்சியின் தீர்மானம் கோரியது – மாநகராட்சியின் ஆட்சேபனையின்மை தெரிவிக்க ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைத்தல் – தொடர்பாக.

**பார்வை:** 1.மாமன்ற தீர்மானம் எண்.331, நாள்.19.12.2014.
2.கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.65923/2002/ஆ4, நாள்.08.09.2015.

*******

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டதன்படி, கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட குறிச்சி, சங்கனூர், தெலுங்குபாளையம், புலியகுளம், கோயம்புத்தூர் மற்றும் கரும்புகடை ஆகிய பகுதிகளில் உள்ள வருவாய் துறைக்கு சொந்தமான 9 இடங்களில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் குடிசைப்பகுதியில் உள்ள மக்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்ட தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு நிலத்தினை வழங்குவதற்கு முன்நுழைவு அனுமதி வழங்க மாநகராட்சியின் ஆட்சேபனையின்மையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவிக்க பார்வை 1ல் காண் மாமன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாவட்ட ஆட்சியருக்கு தீர்மான நகல் அனுப்பப்பட்டது.

தற்போது பார்வை 2ல் காண் மாவட்ட ஆட்சியரின் கடிதத்தில், ஏற்கனவே வழங்கப்பட்ட ஆட்சேபனையின்மை தீர்மானத்தில் கீழ்கண்ட இடங்களுக்கான திருத்தங்கள் மேற்கொண்டு திருத்திய தீர்மான நகலினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண். | கிராமம் | பழைய புல எண் | புதிய புல எண் | பரப்பு | வகைப்பாடு | திட்டத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1. | சங்கனூர் | 144/2ஏ | ட.ச.12, வார்டு S(19) பிளாக் 4 | 1.62 ஏக்கர் | வாரி | சண்முக கவுண்டர் நகர் |
| | | 72/4 | ட.ச.37, வார்டு S(19) பிளாக் 10 | 0.06 ஏக்கர் | வண்டிப்பாதை | |
| 2. | புலியகுளம் | 1697/1 (ப) | ட.ச.3905/2, வார்டு 10 பிளாக் 29 | 1.60 ஏக்கர் | வாய்க்கால் | மசாலா காலனி |
| | | 1697/1 (ப) | ட.ச.3905/4, வார்டு 10 பிளாக் 29 | 0.06 ஏக்கர் | வாய்க்கால் | |
| 3. | கணபதி (மேற்கு) | 234/1 | ட.ச.82, வார்டு T(20) பிளாக் 38 | 2.39 ஏக்கர் | வாரி | கணேசன் நகர் |

எனவே, மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக் கொண்டதன்படி, பார்வை 1ல் காண் தீர்மானத்தின் வ.எண்.2, 4, 6 மற்றும் 7ல் உள்ள புல எண்களுக்கு பதிலாக மேற்கண்ட இடங்களில் குடியிருப்பு வீடுகள் கட்ட தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு நிலத்தினை வழங்குவதற்கு முன்நுழைவு அனுமதி வழங்க திருத்திய மாநகராட்சியின் ஆட்சேபனையின்மை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவிக்க ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 11858 /2012/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 216 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 19**

பொருள்: மேதவர் காலனி – கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம், வார்டு எண்.24, மேதவர் காலனி பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் (டி.எஸ்.எண்கள்.938/1, 938/2, 939/1, 939/2, 940/1, 940/2, 943/2, 946/1, 946/2, 946/3, 947/1, 947/2, 947/3, 948/1, 948/2 மற்றும் 948/3) 2279.50 ச.மீ பரப்பளவில் கட்டப்பட்டுள்ள பழைய குடியிருப்பில் வாடகை அடிப்படையில் நீண்ட பல வருடங்களாக உள்ள குடியிருப்பு கட்டிடம் மிக பழையதாக இருப்பதை குடிசை மாற்று வாரியத்தின் கீழ் அக்குடும்பங்கள் அவ்விடத்திலேயே வாழத்தக்க வகையில் அடுக்குமாடிக் கட்டிடமாக கட்ட அரசு ஒப்புதல் பெற்று கட்டுமானம் செய்வது – மாநகராட்சி நிலம் குடிசை மாற்று வாரியத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்தல் – மாமன்றத்தின் இசைவினை வேண்டி பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:
1. ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் ந.க.எண்.539/2010/எச்1(மே), நாள்.10.12.2014.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.40561/2014/எம்.சி.எ4, நாள்.04.03.2015.

********

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.24, மேதவர் காலனி பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் (டி.எஸ்.எண்கள்.938/1, 938/2, 939/1, 939/2, 940/1, 940/2, 943/2, 946/1, 946/2, 946/3, 947/1, 947/2, 947/3, 948/1, 948/2 மற்றும் 948/3) 2279.50 ச.மீ பரப்பளவில் கட்டப்பட்டுள்ள பழைய குடியிருப்பில் வாடகை அடிப்படையில் நீண்ட பல வருடங்களாக உள்ள குடியிருப்பு கட்டிடம் மிக பழையதாக இருப்பதை குடிசை மாற்று வாரியத்தின் கீழ் அக்குடும்பங்கள் அவ்விடத்திலேயே வாழத்தக்க வகையில் அடுக்குமாடிக் கட்டிடமாக தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக கட்ட உத்திரவு அனுமதி கோரப்பட்டுள்ளது.

பார்வை 2ல் கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் மாநகராட்சி நிலம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாநகராட்சி நிலம் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்ய மாமன்றத்தின் இசைவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 539/2010/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 217 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 20**

பொருள்:- பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – பிரதான அலுவலகம் பொறியியல் பிரிவு – திரு.எல். அருணாச்சலம், ஓட்டுநர் – வீடு கட்டும் முன்பணம் அனுமதித்தல் – தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலகம், பொறியியல் பிரிவில் ஓட்டுநராக பணியாற்றும் திரு. எல். அருணாச்சலம் அவர்களுக்கு கோவை மாவட்டம், அன்னூர் தாலூகா, மசக்கவுண்டன் செட்டிபாளையம் கிராமம், SF.No.566/2A, 566/3M, 566/3G, 566/3H, 566/3I, 566/3J, 566/3K, 566/3L, 566/3E, 566/3F, 566/3Hமொத்தம் 8.20 ஏக்கர் மனையிடங்களாக பிரித்து '***Green Castles'***என்ற பெயரில் Town and Country Planning, Chennai, Ref.No.7978/2012, LA2 dated: 19.04.2012 மற்றும் Deputy Director of Town and Country Planning, Coimbatore, Ref.No.4012/2014, Ko.Ma.4 dated.09.12.2014 and DTCP No.9/2015ன் படி அனுமதி பெற்று அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் மனை எண்.40 மற்றும் 41ஐ (3488 சதுரடி) அலுவலகம் மூலம் வழங்கப்படும் முன்பணம் வாயிலாக கிரயம் செய்து கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி காலிமனையை கிரயம் செய்ய மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து வீடு கட்டும் முன்பணமாக ரூ.9,20,000/—ஐ மாநகராட்சி விதிகளின்படியும், அரசு விதிமுறைகளுக்குட்பட்டும் ஒரே தவணையில் அவருக்கு வழங்கவும் மேற்படி அசல் தொகையை 120 மாத சம தவணைகளிலும், பின்னர் வட்டி தொகையை 48 மாத சம தவணைகளில் பிடித்தம் செய்து கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம். ந.க.எண்.6967/15/எம்சி7

**மாநகர மன்ற தீர்மானம் எண் 218 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 21

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் -2015 ஆண்டிற்கு அரசு பொருட்காட்சி – வ.உ.சி.பூங்கா மைதானத்தில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் தற்காலிக குத்தகை உரிமம் - 30.03.2015 அன்று நடைபெற்றது - தொடர்பாக.

பார்வை 1.அரசு ஆணை (நிலை) எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை நாள்.25.05.2009.
2.ஆணையாளர் உத்திரவு நாள்.08.05.2015.
3.மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி நாள்.02.06.2015.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் 2015-ம் ஆண்டிற்கு அரசு பொருட்காட்சி, வ.உ.சி.பூங்கா மைதானத்தில் நடைபெறுவதால் மேற்படி மைதானத்தில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் தற்காலிக குத்தகை உரிமத்திற்கு 30.03.2015 அன்று பொது மின் ஏலம் நடைபெற்றது.

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 2015 ஆண்டிற்கு 30.03.2015-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | அரசுபொருட்காட்சி 2015 வ.உ.சி பூங்கா மைதானத்தில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்த கட்டணம் வசூலிக்கும் தற்காலிக குத்தகை உரிமம். (ஒப்படைக்கும் நாள் முதல் அரசு பொருட்காட்சி முடிவும் நாள் வரை) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.3,000/- (நாள் ஒன்றுக்கு) வசூலிக்கப்பட வேண்டிய கட்டணங்கள் 1.சைக்கிள் -ரூ.2/- 2.இரண்டு சக்கர வாகனம்-ரூ.5/- 3.நான்கு சக்கர வாகனம்-ரூ.10/- | திரு.K.A.முகமது லியாஸ் (மின் ஏலம்) | 9,200/- (ஒப்பந்தப்புள்ளி) |

இவ்வினத்திற்கு 2015 ஆண்டிற்கு நடைபெறுகின்ற அரசு பொருட்காட்சிக்கு 30.03.2015-ம் அன்று நடைபெற்ற ஏலத்தில் பனிரெண்டு நபர்கள் கலந்துக்கொண்டார்கள். இதில் திரு.S.கிரிராஜ் என்பவர் ஒரு நாளைக்கு ரூ.190000/- என தவறுதலாக அளித்துள்ளார். எனவே இது நிராகரிக்கப்பட்டது. திரு.K.A.முகமது லியாஸ் அவர்கள் மின் ஏலம் மூலம் ரூ.9200/- நாள் ஒன்றுக்கு ஏலக்கோரிக்கையானது அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.3000/-யை விட கூடுதலாக உள்ளதால் இவ்வினத்தினை 27.04.2015-ல் மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்படை செய்தமைக்கு பின்னேற்பு வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க. எண்.9999/2014/அ2(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 219 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 22

பொருள்- நிர்வாகம் - கல்வி - கோயம்புத்தூர் மாநகரட்சி – மாநகராட்சி பள்ளிகளில் 10 மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ,மாணவியருக்கு தினசரி மாலையில் சிறப்பு வகுப்புகள் நடைபெறுவது – சிறப்பு வகுப்புகளில் சிற்றுண்டி வழங்குதல் - மாமன்ற அனுமதி பெற பொருள் வைத்தல் - சார்பு.

----

மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் 10 மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ,மாணவியருக்கு மார்ச்/ஏப்ரல் 2016-ல் நடைபெறவுள்ள அரசு பொதுத் தேர்வுகளை எதிர் கொள்ள தயார் செய்யும் பொருட்டு, பள்ளிகளில் மாலை நேர சிறப்பு வகுப்புகள் துவங்குவதற்கு முன்மாணவ, மாணவியருக்கு சிற்றுண்டி வழங்க 2013-2014-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ரூ.100 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிற்றுண்டி சிறப்புற வழங்கப்பட்டு வருகிறது.

இதன்காரணமாக பொதுத் தேர்வுகளின் தேர்ச்சி சதவிகிதமானது அதிகரித்தது மட்டுமல்லாமல் மாணவ,மாணவியர்களின் கல்வித்தரமும் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இவ்வாண்டும் இத்திட்டத்தை சிறப்புற செயல்படுத்தும் பொருட்டு மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் 10 மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவ,மாணவியருக்கு மார்ச்/ஏப்ரல் 2016-ல் நடைபெறவுள்ள அரசு பொதுத் தேர்வுகளை எதிர் கொள்ள தயார் செய்யும் பொருட்டு, பள்ளிகளில் மாலை நேர சிறப்பு வகுப்புகளுக்கு கீழ்காண் சிற்றுண்டி வகைகள் வழங்கிட

<u>சிற்றுண்டிகளின் வகைகள்</u>

| வ.எண் | கிழமை | சுண்டல் வகை | நீர்மப்பொருள் | சிற்றுன்டி வகை |
|---|---|---|---|---|
| 1 | திங்கள் | கருப்பு சுண்டல்(Black Channa Sundal ) | போன்விட்டா (Bournvita) | நியூட்ரி பிஸ்கட் (Nutri Biscuit) |
| 2 | செவ்வாய் | மூங்தால் சுண்டல் (Moong Dal Sundal) | காய்கறி சூப் (Vegetale Soup) | கோதுமை பிஸ்கட் (Wheat Biscuit) |
| 3 | புதன் | சோயா சுண்டல் | பாதாம் பால் | உப்பு பிஸ்கட் |
| 4 | வியாழன் | வெள்ளை கொண்டைக் கடலை சுண்டல் | சத்து பால் (Nutri Milk) | இனிப்பு பிஸ்கட் |
| 5 | வெள்ளி | காய்கறி வடை | ஹார்லிக்ஸ் | பிஸ்தா பிஸ்கட் |

ஏற்படும் தோராய செலவினம் :- மதிப்பீடு செய்யப்பட்டு கீழே சமர்ப்பிக்கப்படுகிறது.

| வகுப்பு | மாணாக்கரின் எண்ணிக்கை | சிற்றுண்டி வழங்கப்படும் நாள் | நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஏற்படும் செலவினம் | தொகை 2X3X4 |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 12-ம் வகுப்பு | 2500 | 50 | 30 | 3750000 |
| 10-ம் வகுப்பு | 2500 | 75 | 30 | 5625000 |
| மொத்தம் | | | | 9375000 |

மேற்படி சிற்றுண்டி வழங்குவதற்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ.93,75,000/-ஐ மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தொடர்ந்து சிறப்பு வகுப்புகளில் மாலை நேர சிற்றுண்டி வழங்க தகுதி வாய்ந்த நிறுவனத்தினை தேர்வு செய்ய ஒப்பந்த புள்ளிகள் கோர அனுமதி வேண்டி மாமன்ற ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1. மாலை நேர சிறப்பு வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் சரியான அளவில் சிற்றுண்டி வழங்கப்பட வேண்டும்.
2. சிற்றுண்டி நல்ல தரமானதாகவும், சுகாதாரமானதாகவும் இருக்க வேண்டும்.
3. உரிய நேரத்தில் மாணவ, மாணவியருக்கு சிற்றுண்டி வழங்கப்பட வேண்டும்.
4. சிற்றுண்டி தயாரித்து வினியோகிக்கும் முறை பாதுகாப்பானதாக இருக்க வேண்டும் இதனால் மாணவர்களுக்கு பின்விளைவு ஏற்படின் சம்பந்தப்பட்ட நிறுவனமே முழுப் பொறுப்பேற்க வேண்டும்.
5. போக்குவரத்து செலவு எதுவும் வழங்கப்பட மாட்டாது.
6. உணவு பொருட்களை வினியோகிக்கும் பொழுது தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்தக்கூடாது.

அலுவலகக்குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண். 6081/2015/ கே-12

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 220 நாள் 19.10.2015</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 23**

**பொருள்:-** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி –திரு. மு. நாகராஜ், இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர், மத்திய மண்டலம்- வீடு கட்டும் முன்பணம் அனுமதித்தல்–தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்தில் இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சராக பணிபுரியும் திரு. மு. நாகராஜ் அவர்களுக்கு கோவை மாவட்டம், அன்னூர் தாலூகா, மசக்கவுண்டன் செட்டிபாளையம் கிராமம், SF.No.566/2A, 566/3M, 566/3G, 566/3H, 566/3I, 566/3J, 566/3K, 566/3L, 566/3E, 566/3F, 566/3H மொத்தம் 8.20ஏக்கர் மனையிடங்களாக பிரித்து ‘***Green Castles***’ என்ற பெயரில் Town and Country Planning, Chennai, Ref.No.7978/2012, LA2 dated: 19.04.2012 மற்றும் Deputy Director of Town and Country Planning, Coimbatore, Ref.No.4012/2014, Ko.Ma.4 dated.09.12.2014 and DTCP No.9/2015ன்படி அனுமதி பெற்று அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் மனை எண்.**122ஐ (2048 சதுரடி)** அலுவலகம் மூலம் வழங்கப்படும் முன்பணம் வாயிலாக கிரயம் செய்து கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி காலிமனையை கிரயம் செய்ய மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து வீடு கட்டும் முன்பணமாக ரூ.**5,00,000/–**ஐ மாநகராட்சி விதிகளின்படியும், அரசு விதிமுறைகளுக்குட்பட்டும் ஒரே தவணையில் அவருக்கு வழங்கவும் மேற்படி அசல் தொகையை **100** மாத சம தவணைகளிலும், பின்னர் வட்டி தொகையை **30** மாத சம தவணைகளில் பிடித்தம் செய்து கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**அனுமதிக்கலாம் ந.க.எண். **6351/15/(எம்சி2)** சி 1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 221 நாள் 19.10.2015</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 24**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.54 – விவேகானந்தா சாலையிலுள்ள ரங்கநாதபுரம் ஆரம்பப்பள்ளி வளாகத்தில் தற்காலிகமாக தரைதளம் மற்றும் முதல் தளம் (13058.55 சதுரடி) மற்றும் வடபுறத்தில் 1720 சதுரடியினை கூடுதலாக அலுவலக பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு வாடகை மறு நிர்ணயம் தொடர்பாக.

பார்வை
1. மாமன்ற தீர்மான எண்.397 நாள்.22.01.2015
2. காவல் கண்காணிப்பாளர் அவர்களின் கடிதம் எண். ந.க.எண்.சி4/5200/10 நாள்.04.05.2015
3. மாமன்ற தீர்மான எண்.400 நாள்.22.01.2015
4. இவ்வலுவலக அறிவிப்பு நாள்.27.03.2015
5. உதவி ஆணையாளர் (வருவாய்) அவர்களின் குறிப்பு நாள்.13.07.2015.
6. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் குறிப்பு நாள்.06.05.2015

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.54-ல் விவேகானந்தா சாலையிலுள்ள ரங்கநாதபுரம் ஆரம்பப்பள்ளி வளாகத்தில் பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி 13058.55 சதுரடிக்கு மாத வாடகை ரூ.5,12,278/- என நிர்ணயம் செய்யப்பட்டதனை 50 சதவீதம் குறைத்து ரூ.2,56,139/- மாத வாடகை என நிர்ணயம் செய்யப்பட்டது.

பார்வை 2-ல் காணும் கடிதத்தில் மாத வாடகை ரூ.2,56,139/- என நிர்ணயம் செய்யப்பட்டதற்கு, கோவை மாவட்ட காவல் அலுவலகத்திற்கு சொந்தமான இடத்தில் தற்போது கட்டிட பணி நடந்து கொண்டிருப்பதாலும் மேலும் மிக குறுகிய காலத்தில் பணி முடிவடைந்து சொந்த கட்டிடத்திற்கு செல்ல இருப்பதாகவும் குறுகிய காலத்திற்கு வாடகையின்றி இயங்க அனுமதி வழங்குமாறு கோரப்பட்டது.

பார்வை 3 மற்றும் 4-ன்படி இதே இடத்தில் கூடுதலாக கட்டப்பட்டுள்ள 1720 சதுரடி மாதவாடகை ரூ.67,475/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பார்வை 5 மற்றும் 6-ல் காணும் குறிப்பின்படி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தின் உபயோகத்திலுள்ள 13058.55 சதுரடிக்கு 50 சதவீதம் குறைக்கப்பட்ட மாத வாடகை ரூ.2,56,139/-ம் மற்றும் கூடுதலாக கட்டப்பட்ட 1720 சதுரடிக்கு மாதவாடகை ரூ.67,475/- ஆக மொத்தம் ரூ.3,23,614/- என நிர்ணயம் செய்ததை மறு நிர்ணயம் செய்வது தொடர்பாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண்.12339/13/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 222 நாள் 19.10.2015</u>**

பழைய வாடகையாக ரூ. 2,56,139 மட்டும் செலுத்த அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 25**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 6396/ 2015/ எம்.டி.3 | வார்டு எண் 37, தண்ணீர் பந்தல் சாலை மற்றும் மசக்காளிபாளையம் சாலையில் தார் பேட்ச் அமைத்தல் | 10.00 | 02.07.15 முதலாம் அழைப்பு | 1).திரு.ஏ.ராஜூ 4.72 % அதிகம் 2)திரு.ஜி. அசோக்குமார் 8.91% அதிகம் | திரு.ஏ.ராஜூ 4.51 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 2 | 5597/ 2015/ எம்.டி.3 | வார்டு எண் . 63, நடு வீதி மற்றும் கள்ளிமடை பகுதிகளில் பழுதடைந்த சிமெண்ட் கான்கரீட் தளம் திரும்ப கட்டுதல் | 9.95 | 02.07.15 முதலாம் அழைப்பு | 1). தி/ள்.கே.பி. கன்ஸ்ட்ரக்சன் 4.48% அதிகம் 2). திரு.டி. பாலசுப்ரமணியம் 5.96% அதிகம் | தி/ள்.கே.பி. கன்ஸ்ட்ரக்சன் 4.40% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 3 | 12421/ 2014/ எம்.டி.3 | வார்டு எண் 37, தண்ணீர் பந்தல் சாலை, அவினாசி சாலை முதல் இரயில்வே கேட் வரை பழுதான தார் சாலை சீரமைத்தல் | 49.00 | 03.07.15 முதலாம் அழைப்பு | 1). தி/ள்.சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.89% அதிகம் 2). தி/ள்.ஸ்ரீ மல்லையன்பில்டர்ஸ் 11.67% அதிகம் | தி/ள்.சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் 4.86% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 4 | 4414/ 2015/ எம்.டி.3 | வார்டு எண் 37, மசக்காளிபாளையம் சாலை, கல்யாணசுந்தரம் வீதி சந்திப்பு முதல் பாலசுப்பிரமணிய நகர் சந்திப்பு வரை பழுதான தார் சாலையை திரும்ப செப்பனிடுதல் | 33.30 | 10.07.15 முதலாம் அழைப்பு | 1).திரு.ஏ.ராஜூ 5.63 % அதிகம் 2)திரு.ஆர். மயில்வாணன் 4.99% அதிகம் | திரு.ஆர். மயில்வாணன் 4.90% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 5 | 4212/ 2015/ எம்.டி.3 | வார்டு எண்.67 ராமகிருஷ்ணாபுரம் ஆரம்ப பள்ளியிலுள்ள மதிய உணவு கூடத்திற்கு ஆர்சிசி கூரை அமைத்து வகுப்பறைகளுக்கு அபிவிருத்தி பணிகள் செய்தல் | 19.90 | 13.07.15 முதலாம் அழைப்பு | 1).திரு.எஸ். முத்துராஜா 4.46 % அதிகம் 2)திரு.கே. பஙகஜம் 15.35% அதிகம் | திரு.எஸ். முத்துராஜா 4.35% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 6 | 5021/ 2015/ எம்.டி.3 | வார்டு எண்.37 கொடிசியா அணுகு சாலை, என்.ஆர்.ஐ கார்டன் சந்திப்பு முதல் கொடிசியா சாலை சந்திப்பு வரை தார் தளம் புதுப்பித்தல் | 20.00 | 15.07.15 முதலாம் அழைப்பு | 1).திரு.தனபால் 5.27 % அதிகம் 2)திரு.ஆர். சுந்தரராஜ் 7.03 % அதிகம் | திரு.தனபால் 4.92 %அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 7 | 3718/ 2015/ எம்.டி.3 | வார்டு எண்.60 கதர் காலனி பகுதியில் தார் தளம் அமைத்தல் | 14.20 | 15.07.15 முதலாம் அழைப்பு | 1).திரு.ஆர். கிருஷ்ணசாமி 4.99 % அதிகம் 2)திரு.கே. ரவிகுமார் 10.36% அதிகம் | திரு.ஆர். கிருஷ்ணசாமி 4.85 %அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 8 | 15211/ 2014/ எம்.டி.3 | வார்டு எண் 56 திருமகள் நகர் 8வது வீதி மற்றும் சந்திரகாந்தி நகர்குறுக்கு சாலைகளை புதுப்பித்தல் | 30.00 | 22.06.15 முதலாம் அழைப்பு | 1).திரு.ஜே. ராபர்ட்ராஜா 4.92 % அதிகம் 2)தி/ள்.எஸ்.பி. பில்டர்ஸ் 8.33 % அதிகம் | திரு.ஜே. ராபர்ட்ராஜா 4.90 %அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் வரிசை எண்.4ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு நிர்வாக அனுமதிக்கு முன் அனுமதியை வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் அவர்கள் வழங்கியதற்கு பின்னேற்பு வேண்டப்படுகிறது. வரிசை எண்.8ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு நிர்வாக அனுமதிக்கு முன் அனுமதியை பணிகள் குழு தலைவர் அவர்கள் வழங்கியதற்கு பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

இப்பணிகளை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

ந.க.எண்.6396/2015/எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 223 நாள் 19.10.2015</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 26**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 12.08.2015 அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1442/ 2015/ எம்.டி.2 | வார்டு எண் 40 ஆவாரம்பாளையம், மகாத்மா காந்தி சாலை பாலாஜி நகர் முதல் சாந்தி நகர் வரை தார் தளம் புதுப்பித்தல். | 75.00 | 05.08.15 முதலாம் அழைப்பு | 1). திரு.எ. அம்மாசையப்பன் 9.81 % அதிகம் 2). திரு.ஆர். கிருஷ்ணசாமி 4.89 % அதிகம் | திரு.ஆர். கிருஷ்ணசாமி 4.86% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 2 | 1443/ 2015/ எம்.டி.2 | வார்டு எண் 39 ஆவாரம்பாளையம், மகாத்மா காந்தி சாலை சாந்தி நகர் முதல் பெருமாள் கோவில் வரை தார் தளம் புதுப்பித்தல். | 75.00 | 05.08.15 முதலாம் அழைப்பு | 1). திரு.எ. அம்மாசையப்பன் 9.81 % அதிகம் 2). திரு.ஆர். கிருஷ்ணசாமி 4.89 % அதிகம் | திரு.ஆர். கிருஷ்ணசாமி 4.86% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 3 | 3732/ 2015/ எம்.டி2 | வார்டு எண் 46 பழைய சக்தி சாலை மற்றும் மணியகாரம்பாளையம் சாலை சந்திப்பு பகுதியில் அமைந்துள்ள வாய்கால்களின் குறுக்கே பாலம் கட்டுதல் | 60.00 | 05.08.15 முதலாம் அழைப்பு | 1). தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் 4.88 % அதிகம் 2). திருமதி.கே. பஙகஜம் 16.49 % அதிகம் | தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் 4.77 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பணிகளுக்கு அவசர அவசியம் கருதி ஒப்பந்த புள்ளிகள் கோர மாண்புமிகு மேயர் அவர்கள் நிர்வாக அனுமதிக்கு முன்அனுமதி வழங்கியதற்கு பின்னேற்பும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

இப்பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1442/2015/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 224 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 27**

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் முன்னாள் மாநகராட்சியின் விடுப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த அதற்கான விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்காக ஏற்கனவே தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின் உண்மைதன்மையை ஆய்வு செய்யும் பொருட்டு ( Proof checking ) தகுதி வாய்ந்த தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனத்தை நியமிக்கும் பணியினை திட்ட மேம்பாட்டு மானிய நிதியில் (Project Development Grant Fund) மேற்கொள்ள தமிழ்நாடு நகர்புர உட்கட்டமைப்பு நிதி சேவைக்கழகத்திற்கு (TNUIFSL), ஒப்படைப்பு செய்ய, அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி மாண்புமிகு மேயர் அவர்கள் 10.09.2015-ல் முன்அனுமதி வழங்கியதற்கும் மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க எண். 2710/2012/ப.வ.( எம்)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 225 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 28**

கோவை மாநகராட்சி - மத்திய மண்டலம் - பொறியியல் பிரிவு – வார்டு எண் -25 கிருஷ்ணசாமி சாலையில் தேவாங்க பள்ளி சாலை முதல் மேம்பாலம் வரை தார்சாலையை புதுப்பித்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.65,50,000/- க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.7243/2015/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 226 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 29**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி** | | | | | | |
| 1 | 6505/ 2015/ எம்.டி.5 | வார்டு எண்.64, ரஙகநாதபுரம் குறுக்கு வீதி, சி.எம்.சி காலனி வடக்கு தெற்கு சாலை, உப்பிலிபாளையம் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 15.00 | 31.08.15 முதலாம் அழைப்பு | 1).திரு.ஆர்.தனபால் 4.98 % அதிகம்<br>2)திரு.ஆர். சுந்தரராஜ் 9.03 % அதிகம் | திரு.ஆர்.தனபால் 4.90 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 2 | 6506/ 2015/ எம்.டி.5 | வார்டு எண்.58க்குட்பட்ட நீலிகோணாம்பாளையம் பகுதியில் அண்ணா நகர் அருகே உள்ள கால்வாய்க்கு மூடு பலகை அமைத்தல் | 10.00 | 14.08.15 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.என்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 4.96 % அதிகம்<br>2)திரு.ஆர்.உமாபதி 7.76 % அதிகம் | தி/ள்.என்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 4.90 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **பொதுநிதி** | | | | | | |
| 3 | 2527/ 2015/ எம்.டி.5 | வார்டு எண்.83 வைசியாள் வீதியில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் மூடு பலகை புதுப்பித்தல் பணி | **66.40** | 21.08.15 முதலாம் அழைப்பு | 1). தி/ள்.கே.ஆர்.எஸ். கன்ஸ்ட்ரக்சன் 4.53 % அதிகம்<br>2).தி/ள்.ஸ்ரீ சபரி இன்ப்ராக்ஸ்ட்ரக்சர் 5.30 % அதிகம் | தி/ள்.கே.ஆர்.எஸ். கன்ஸ்ட்ரக்சன் 4.50 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. | 10394/ 2015/ எம்.டி.5 | வார்டு எண்.84க்குட்பட்ட பகுதிகளில் உள்ள உப்புமண்டி பின்புறம் பகுதி, எல்.ஜி தோட்டம்ம் ராஜு வீதி, அய்யாசாமி கோயில் வீதி ராமர் கோயில் வீதி ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மூடுபலகை மற்றும் சிறுபாலம் புதுப்பித்து கட்டுதல் | **75.00** | 17.08.15 மூன்றாம் அழைப்பு | 1). தி/ள்.கே.ஆர்.எஸ். கன்ஸ்ட்ரக்சன் 4.73 % அதிகம்<br>2).தி/ள்.ஸ்ரீ சபரி இன்ப்ராக்ஸ்ட்ரக்சர் 5.90 % அதிகம் | தி/ள்.கே.ஆர்.எஸ். கன்ஸ்ட்ரக்சன் 4.70 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 5. | 2526/ 2015/ எம்.டி.5 | வார்டு எண்.83 ராஜா வீதியில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் மூடு பலகை புதுப்பித்தல் | **68.80** | 24.08.15 முதலாம் அழைப்பு | 1). தி/ள்.கே.ஆர்.எஸ். கன்ஸ்ட்ரக்சன் 4.46 % அதிகம்<br>2).தி/ள்.ஸ்ரீ சபரி இன்ப்ராக்ஸ்ட்ரக்சர் 7.04 % அதிகம் | தி/ள்.கே.ஆர்.எஸ். கன்ஸ்ட்ரக்சன் 4.45 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 6 | 2169/ 2014/ எம்.டி5 | வார்டு எண்.83 வைசியால் வீதி வி. வி. எம். ஹோமில் கூடுதல் அறைகள் கட்டுதல் | **17.50** | 19.08.15 இரண்டாம் அழைப்பு | திரு.ஆர். செல்வராஜ் 4.96 % அதிகம் | திரு.ஆர். செல்வராஜ் 4.90 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 7 | 10482/ 2014/ எம்.டி5 | வார்டு எண் 74க்குட்பட்ட பாரி நகர் பகுதியில் மறு தார் தளம் அமைத்தல் | **22.00** | 19.08.15 இரண்டாம் அழைப்பு | 1).திரு.எஸ். ரத்தினவேலுசாமி 5.00 % அதிகம்<br>2)தி/ள்.ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 8.81 % அதிகம் | திரு.எஸ். ரத்தினவேலுசாமி 4.90 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 8 | 4608/ 2015/ எம்.டி.5 | வார்டு எண்.54 பாரதி வீதி சாலையில் தார் தளம் புதுப்பித்தல் | **14.25** | 01.09.15 முதலாம் அழைப்பு | 1) தி/ள்.பி.எஸ்.கே. அசோசியேட்ஸ் 5.01 % அதிகம்<br>2). தி/ள்.சரவணா அசோசியேட்ஸ் 5.23 % அதிகம் | தி/ள்.பி.எஸ்.கே. அசோசியேட்ஸ் 4.98 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 9 | 5065/ 2015/ எம்.டி.5 | வார்டு எண்.84 கெம்பட்டி காலனியில் உள்ள மாநகராட்சி தொடக்க பள்ளியில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் | **5.95** | 25.08.15 முதலாம் அழைப்பு | 1).திரு.பி.இளங்கோ 5.16 % அதிகம்<br>2)திரு.சி.சங்கரப்பன் 10.63 % அதிகம் | திரு.பி.இளங்கோ 4.98 % அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 10 | 1910/ 2015/ எம்டி5 | வார்டு எண்.25க்குட்பட்ட தியாகராய புது வீதி 1, 2 மற்றும் 3ல் தார் சாலையை புதுப்பித்தல் | 34.00 | 17.08.15 இரண்டாம் அழைப்பு | 1). திரு.ஆர். மயில்வாணன் 4.99% அதிகம்<br>2). திரு.ஏ.ராஜு 6.16% அதிகம் | திரு.ஆர். மயில்வாணன் 4.90% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 11 | 4613/ 2015/ எம்டி5 | வார்டு எண்.74க்குட்பட்ட ரூபா நகர் மற்றும் முனுசாமி நகர் சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 40.00 | 24.08.15 முதலாம் அழைப்பு | 1). திரு.ஆர். மயில்வாணன் 4.99% அதிகம்<br>2). திரு.ஏ.ராஜு 6.11% அதிகம் | திரு.ஆர். மயில்வாணன் 4.90% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்

ந.க.எண். **6505 /2015/**எம்.டி.**5**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 227 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 30**

**பொருள்:** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு ஆண்டு சந்தா ரூ. **5,000/-** (ஐந்தாயிரம்) என நிர்ணயித்து - வழுங்க – மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிப்பது – தொடர்பாக.

**பார்வை:** ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள் **12.09.2015.**

------------

கூடுதல் இயக்குநர், நகராட்சி நிர்வாகம் இயக்குநரகம், சென்னை அவர்களின் கடிதத்தில் இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு ஆண்டு சந்தா செலுத்துவது சம்மந்தமாக, மாநகராட்சிக்கு ரூ **5000/-** என நிர்ணயத்து மாமன்ற கூட்டத்தில் பொருள் வைத்து அதன் விபரத்தினை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வையில் காணும் ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி, மேற்படி சங்கத்திற்கு ஆண்டு சந்தா ரூ. **5000/-** வழஙகுவது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண்.**4449/2012/**எம்சி **9**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 228 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 31**

**பொருள்:-** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி –திருமதி. ஆ. ஜானகி, இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர், மத்திய மண்டலம்- வீடு கட்டும் முன்பணம் அனுமதித்தல்–தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்தில் இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சராக பணிபுரியும் திருமதி. ஆ. ஜானகி அவர்களுக்கு கோவை மாவட்டம், அன்னூர் தாலூகா, மசக்கவுண்டன் செட்டிபாளையம் கிராமம், SF.No.566/2A, 566/3M, 566/3G, 566/3H, 566/3I, 566/3J, 566/3K, 566/3L, 566/3E, 566/3F, 566/3H மொத்தம் 8.20ஏக்கர் மனையிடங்களாக பிரித்து **'*Green Castles*'** என்ற பெயரில் Town and Country Planning, Chennai, Ref.No.7978/2012, LA2 dated: 19.04.2012 மற்றும் Deputy Director of Town and Country Planning, Coimbatore, Ref.No.4012/2014, Ko.Ma.4 dated.09.12.2014 and DTCP No.9/2015ன்படி அனுமதி பெற்று அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் மனை எண்.**1**ஐ **(2045 சதுரடி)** அலுவலகம் மூலம் வழங்கப்படும் முன்பணம் வாயிலாக கிரயம் செய்து கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி காலிமனையை கிரயம் செய்ய மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து வீடு கட்டும் முன்பணமாக ரூ.5,50,000/—ஐ மாநகராட்சி விதிகளின்படியும், அரசு விதிமுறைகளுக்குட்பட்டும் ஒரே தவணையில் அவருக்கு வழங்கவும் மேற்படி அசல் தொகையை 60 மாத சம தவணைகளிலும், பின்னர் வட்டி தொகையை 30 மாத சம தவணைகளில் பிடித்தம் செய்து கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**அனுமதிக்கலாம் ந.க.எண். **6351/15/(எம்சி2)** சி 1 ம

**மாநகர மன்ற தீர்மானம் எண் 229 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 32**

கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - டாடாபாத் பிரிவு - வார்டு எண் - 51 ல் டாக்டர் இராதாகிருஷ்ணா சாலை தென்புறத்தில் ஆறுமுக்கு முதல் கிழக்காக உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.73,95,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்.5886/2015/எம்டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 230 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 33**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் -பொறியியல் பிரிவு - வார்டு எண் 22, பாரதி பூங்காவில் தளவாடங்களுடன் கூடிய உடற்பயிற்சி கூடம், தியான அறை கட்டுதல் மற்றும் கூடுதல் அபிவிருத்தி பணிகள் செய்தல் பணிக்கென ரூ.60,00,000/-க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல்

----------------

மேற்படி பூங்கா, அதிக மக்கள் பயன்படுத்தும் பிரதான பூங்காவாகும். பூங்காவினுள் உடற்பயிற்சி கூடம், தியான அறை மற்றும் நீரூற்று வசதி செய்ய வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் பொது மக்கள் கோரியுள்ளார்கள். இதற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் ஆய்வின் போது மேற்படி பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதின் பேரில் மதிப்பீடு ரூ.60,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 8807/2015/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 231 நாள் 19.10.2015**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 34**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதி மன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறைகளின் அமைச்சர் அவர்கள் கடந்த 08-08-2015 அன்று வெள்ளலூர் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் பங்களிப்புடன் நிறுவப்பட்டுள்ள இயற்கை உரம் தயாரிக்கும் ஆலை மற்றும் சேனிடரி லேண்ட் ∴ பில் கட்டமைப்பு ஆகியவற்றின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை கள ஆய்வு மேற்கொண்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் நகராட்சி நிர்வாகத்துறையின் அரசு முதன்மைச் செயலர் அவர்கள், மாண்புமிகு மேயர், நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்கள், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள், ஆணையர் அவர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோர் பஙகேற்றனர்.

